Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 106 | வெள்ளிக்கிழமை | மாசி 28 ஆம் நாள் 12 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# அறிக்கையாளரின் பரிந்துரைகள் நடைமுறையாவது கட்டாயமே!

- தீர்மான வரைவில் உள்ளடக்கம்
- இலங்கையின் கோரிக்கை நிராகரிப்பு



கொழும்பு, மார்ச் 12

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக, 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர்கள் பலர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு தமது அவதானிப்புக்களையும் பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளனர். அவை அனைத்தையும் இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 19

## தவறான முடிவெடுத்து முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

வட்டுக்கோட்டை, மூளாய் செம்பாட்டம் தோட்டத்தைச் சேர்ந்த ஒருவர் தவறான முடி 19

## வீட்டிலிருந்து சென்றவர் சடலமாக மீட்பு

வவுனியா, மார்ச் 12

செட்டிக்குளம் காட்டுப் பகுதியில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் உடல் தூக்கில் தொங் 19

## குளத்தில் மூழ்கி முதியவர் சாவு!

பூநகரி, மார்ச் 12

பூநகரியில், குளத்தில் குளிக்கச் சென்ற முதியவர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். குளத்தில் மூழ் 19

## கொலை செய்தே குளத்தில் வீசப்பட்டார் கர்ப்பிணிப் பெண்

*பரிசோதனையில் கண்டுபிடிப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 12

கிளிநொச்சி அம்பாள் குளத்தில் நேற்றுமுன்தினம் சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்ட பெண் கொலை செய்யப்பட் 04

## இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தமிழர் தாயகத்துக்கு திடீர் வருகை

ஐ.நா. அமர்வு நடைபெறும் சூழலில் தமிழ்த் தலைவர்களுடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 12

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கை தொடர்பான பிரேரணை விவகாரம் முக்கிய கட்டத்துக்கு நகர்ந்துள்ள சூழலில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே வடக்கு மற்றும் கிழக்கு மாகா 19

## இ.போ.ச. பஸ் பயணிகளுக்கு அறிவுறுத்தல்!

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து கிளிநொச்சி அறிவியல்நகருக்குத் தினமும் காலை 6.30 மணியளவில் பயணிக்கும் இலங்கை 19



## யாழ். நகரத்தில் ஒருவர் ஹெரோய்னுடன் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஹெரோய்ன் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று 19

## தொடர் காய்ச்சல்; ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

தொடர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தவர் படுக்கையிலேயே உயிரிழந்தார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் நடந்துள்ளது. சீனி பரமநாதன் (வயது 65) என்னும் 5 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந் 19

## வீடு புகுந்து கத்திக்குத்து இளம் குடும்பஸ்தர் சாவு

வட்டக்கச்சியில் கொடூரம்



யாழ்ப்பாணம், மார்ச் 12

கத்திக்குத்துக்கு இலக்கான குடும்பத்தலைவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். கத்தியால் குத்தினார் என்று கூறப்படும் சந்தேநபர் நேற்று இராமநாதபுரம் 19

## யாழ். பிரதேச செயலர்களை கூண்டோடு இடமாற்ற முயற்சி

ஆளுங்கட்சி அரசியல்வாதியின் கைங்கரியம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளை குறிப்பாக பிரதேச செயலர்களை இடமாற்றம் செய்வதற்கான கடும் முயற்சிகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆளும் கட்சி அரசியல்வாதி ஒருவரால் முன்னெடுக்கப் 19

## வவுனியாவில் நேற்று 8 பேருக்குத் தொற்று

வவுனியா, மார்ச் 12

வவுனியா ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றுவோர் உட்பட 8 பேருக்கு நேற்றுக் கொரோனாத் தொற்று உறுதி செய் 19

## பயிற்சிப் பட்டறைக்கு வந்த 2 பேருக்கு வைரஸ் தொற்று!

யாழ்ப்பாணம், மார்ச் 12

வடக்கு மாகாணத்தில் நேற்று இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 19

# 2031 ஆம் ஆண்டு இலங்கையில் தமிழர் மட்டுமே சிறுபான்மை!

## சமுதாய மருத்துவ நிபுணர் வல்லிபுரநாதன் எச்சரிக்கை

**கிளிநொச்சி, மார்ச் 12**
**இலங்கையில் 2031 ஆம் ஆண்டளவில் முதலாவது சிறுபான்மை இனமாக தமிழர்களே காணப்படுவார்கள் என்று சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற 'தமிழர்களின் எதிர்காலம் ஒரு குடித்தொகையியல் நோக்கு' எனும் நிகழ்வில், பிரதம வளவாளராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ் மக்களின் சனத்தொகை பெருக்க வீதம் வருடாந்தம் குறைவடைந்தே செல்கிறது. இதற்குக் காரணம் போர், நலிவுற்ற பொருளாதாரம், புலம்பெயர்வு, காலம் பிந்திய திருமணம், குடும்ப கட்டமைப்பு சிதைவுகள், நாகரிகம், கருத்தடைகள் மற்றும் குடும்பகட்டுப்பாடுகள் என்பவையாக பல்வேறு காரணிகளை கூறிக் கொண்டே போகலாம்.

வடக்கு கிழக்கில் தமிழ் பாடசாலைகளில் தரம் ஒன்றில் இணைந்து கொள்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் குறைவடைந்து செல்கின்றமையை புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இது எமது இனத்துக்கு ஆபத்தானது. ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் 11 நாடாளுமன்ற பிரதிநிதிகள் இருந்தார்கள். தற்போது 7 நாடாளுமன்ற பிரதிநிதிகளே உள்ளனர். தமிழ் மக்களின் சனத்தொகை குறைவடைந்ததன் விளைவே இது.

தமிழ்த் தலைமைகள் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு கொடுக்கின்ற
முக்கியத்து வைத்தை எமது இனத்தின் ஆபத்தான பிரச்சினைகளுக்குக் கொடுப்பதில்லை. தமிழ் மக்களின் சனத்தொகை இப்படியே குறைவடைந்து சென்றால், நாம் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு, உரிமைகளை அனுபவிப்பதற்கு மக்கள் இருப்பார்களா என்ற கேள்வியே எழுகிறது.

எனவே தமிழ் இனத்தின் சனத்தொகை அதிகரிப்பை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இலங்கையின் சனத்தொகை பெருக்க வீதத்தில் முஸ்லிம்கள், சிங்களவர்களுக்கு அடுத்த நிலையிலேயே தமிழர்கள் காணப்படுகின்றனர். - என்றார்.

கிளிநொச்சி மாவட்ட உளநல மருத்துவர் ம.ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துப்படுத்துகின்ற பல்வேறு
அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (த-214)

## சிறையிலும் சிவராத்திரி!

### புதிய மகஸினில் நேற்று சிறப்பாக நடைபெற்றது


கொழும்பு, மார்ச் 12
கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலையில், தமிழ் அரசியல் கைதிகள் தங்கியுள்ள ஜி.எச். பிரிவில் மகாசிவராத்திரி விஷேட பூசை வழிபாடுகள் நேற்று நடைபெற்றன.

அங்குள்ள சிறி பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானத்தில் நேற்று இரவு மகாசிவராத்திரி வழிபாடுகள், அரசியல் கைதியாக இருக்கும் பிரம்மஸ்ரீ. ரகுபதி சர்மா தலைமையில் நடைபெற்றன.

இதற்குத் தேவையான பூசைப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களை அகில இலங்கை இந்துமாமன்றம் வழங்கியிருந்தது. சிவராத்திரி விரதத்தையொட்டி, இன்று வெள்ளிக்கிழமை மதியம் புதிய மகஸின் சிறையில் உள்ள சகல கைதிகளுக்கும் அன்னதானம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பணிப்பின் பேரில் சிறைச்சாலைத் திணைக்களத்தின் அனுமதியுடன் இந்த வழிபாடு நடைபெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## யாத்திரிகர்கள் விடுதிக்கு மடுவில் நேற்று அடிக்கல்



மன்னார், மார்ச் 12
மடு தேவாலய பகுதிகளில் யாத்திரிகர்களுக்கான விடுதி அமைப்பதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு சுற்றுலாத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் மடு பிரதேசத்தில் நேற்று நடைபெற்றது.

இந்திய அரசின் நன்கொடையான 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 144 வீடுகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு அமைக்கவே மேற்படி அடிக்கல் நடுகை செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான், கே.திலீபன் மற்றும் இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (த-56)

### மூங்கிலாற்றில் சிவன் சிலை:

## பிரதேச சபையினருக்கும் மக்களுக்குமிடையே முறுகல்!

புதுக்குடியிருப்பு, மார்ச் 12
பிரதேச சபையின் அனுமதி இன்றி ஆலயக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, மூங்கிலாற்று கிராம மக்களுக்கும், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

சிவராத்திரியை முன்னிட்டு நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட மூங்கிலாற்றுக் கிராமத்தில் உள்ள பொதுக் காணி ஒன்றில் சிவன் சிலை அமைத்து அந்தக் கிராம மக்கள் வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர்.

இதனையடுத்து குறித்த இடத்துக்குச் சென்ற பிரதேச சபையைச் சேர்ந்தவர்களுக்கும், அங்கு நின்ற மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

பிரதேச சபையின் அனுமதி பெற்றே அனைத்து ஆலயங்கள், கட்டங்கள் அமைக்கவேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை தொடர்பில் சபையின் உறுப்பினர் எஸ்.குகனேசன் மக்களிடம் சுட்டிக்காட்டினார்.

இருந்தும் குறித்த காணி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ளதால் பிரதேச சபை எதுவித நடவடிக்கையும் எடுக்கமுடியாத நிலை உள்ளது என்றும் சபையின் தவிசாளர் அ.தவக்குமார் தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதியில் பல கிறிஸ்தவ சபைகள் காணப்படுகின்றன. ஆனால், 800 க்கும் மேற்பட்ட இந்து மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். மக்கள் ஆலயங்களுக்கு செல்லவேண்டுமாக இருந்தால் நீண்டதூரம்தான் செல்லவேண்டும். இதனை கருத்திற் கொண்டு குறித்த பகுதியில் சிவராத்திரியை முன்னிட்டு சிவன் சிலை அமைக்கப்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இது குறித்து கிராம அலுவலருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றதையடுத்து, விடயம் பிரதேச செயலாளரின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-19)

## மணி முதல்வராகியது ராஜபக்சக்களின் தயவில்!

### முன்னணி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ்ப்பாணம் மாநகர முதல்வராக வி.மணிவண்ணனை அமர்த்தியது ராஜபக்சக்களே என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் மணிவண்ணன் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரைச் சாடியிருந்தார். ராஜபக்சக்களுடன் முன்னணியினரைத் தொடர்புபடுத்தி கருத்துக் கூறியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுகாஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
"ஈ.பி.டி.பி. கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்தே அவருடைய நியமனத்தை ஆதரித்திருந்தன. அதனால் மணிவண்ணனை முதல்வர் ஆக்கியவர்கள் ராஜபக்சக்களே. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ராஜபக்சக்களை ஒருபோதும் ஆதரிக்கவில்லை" என்று தெரிவித்தார்.

"தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 2019 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பதை நானும் சேர்ந்தே ஆதரித்தேன்" என்று மணிவண்ணன் கூறும் காணொலிப் பதிவுகளையும் சுகாஷ், ஊடகவியலாளர் சந்திப்பின் போது காண்பித்தார்.

"அவருடன் கூட இருப்பவர்களும் அவ்வாறே தெரிவித்திருந்தனர். எனவே மணிவண்ணன் கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல்லெறிவது கூடாது. மணிவண்ணன் தரப்பினர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு எதிராக கருத்துக்கள் தெரிவிப்பதை நிறுத்திவிட்டு தங்களுடைய அரசியலை கவனிப்பது நல்லது" என்றும் அவர் தெரிவித்தார். (த-319,26)

## தென்னை மரங்கள் யானையால் சேதம்

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மணியங்குளம் கிராமத்துக்குள் நேற்றுமுன்தினம் இரவு புகுந்த யானை ஒன்று அங்கிருந்த தென்னை மரங்கள் பலவற்றை சேதப்படுத்தியுள்ளது. பயன்தரு நிலையில் குறித்த மரங்கள் அழிக்கப்பட்டமையால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னரும் இவ்வாறு யானைகளால் அந்தப் பகுதியில் பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டன எனச் சுட்டிக்காட்டிய மக்கள், இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-10)

# பல்லாயிரம் பக்தர்களுடன் கேதீச்சரத்தில் மகா சிவராத்திரி

## தாகசாந்தி நிலையங்களில் குளிர்பானங்களுக்கு பதிலாக சூடான பானங்களும் கொத்தமல்லி குடிநீரும்







தலைமன்னார், மார்ச் 12

வரலாற்றுப் பிரசித்திபெற்ற, பாடல் பெற்ற தலமான மன்னார் திருக்கேதீச்சரம் கோவிலில், மகாசிவராத்திரி விஷேட வழிபாடுகள் பக்திபூர்வமாக நேற்று நடைபெற்றன.

காலை தொடக்கம் நள்ளிரவு வரை பெருந்தொகையான பக்தர்கள் கூட்டம் கலந்துகொண்டிருந்தனர். எனினும், சுகாதார நடைமுறைகளைப் பேணும் முகமாக கோவிலில் தங்கள் நேர்த்திக் கடன்களை முடித்துக்கொண்டு உடன் திரும்பிச் சென்றமையைக் காணக்கூடியதாக இருந்தது.

உலக இந்து மக்களின் பெரு விழாக்களில் ஒன்றான மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு நேற்று காலை தொடக்கம் பல்லாயிரம் பக்தர்கள் கூட்டம் கோவிலுக்குவந்து தங்கள் நேர்த்திக் கடன்களை முடித்துக்கொண்டு திரும்பிச் சென்றனர்.

கடந்த காலங்களில் இந்த வழிபாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் பல லட்சம் மக்கள் கலந்துகொள்வது வழமையானது.

இந்தமுறை கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட மக்களே கலந்துகொள்ள வேண்டும் என்பது சுகாதாரப் பகுதியினரின் வேண்டுகோளாக இருந்தமையால் வழமையான வெளி மாவட்ட போக்குவரத்து சேவைகளுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லை.

இருந்தபோதும் வட பகுதியிலுள்ள மாவட்டங்களிலிருந்து திருக்கேதீச்சரத்துக்கு காலை தொடக்கம் இரவு வரை பலர் வந்துகொண்டிருந்தனர். இம் முறை சுகாதாரத்தைப் பேணுமுகமாக மட்டுப்படுத்தப்பட்ட முறையில் அன்னதானம் பொதிகளாக வழங்கப்பட்டன. தாகச் சாந்தி நிலையங்களில் குளிர் பானங்களுக்குப் பதிலாக, சூடான பானங்களும் கொத்தமல்லி குடிநீரும் வழங்கப்பட்டன. (த-60,213)

# புலோலி அதிபர் வீட்டில் தாலிக்கொடி அபகரிப்பு


யாழ்ப்பாணம், மார்ச் 12

பருத்தித்துறை புலோலிப் பகுதியில், அதிபரின் வீடு புகுந்த கொள்ளையர், கத்தியைக் காட்டி அச்சுறுத்தி சுமார் 6 பவுண் நிறையுடைய தாலிக்கொடியை அறுத்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை 6.30 அளவில் இடம்பெற்றது. முகக்கவசம் அணிந்து முகத்தை மூடியவாறு வந்த இருவரே கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபரின் மனைவியிடமே இந்தக் கொள்ளை நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (த-26)

வேலையாள்கள் தேவை
(Mechanic)
கட்டட நிர்மாணத்துறையில்
இயந்திரங்களை
பழுதுபார்ப்பதற்கு
வேலை ஆள்கள் தேவை.
077 247 3883

## கண்ணீர் அஞ்சலி



அன்னை மடியில் 07 - 06 - 1943

இறைவன் மடியில் 10 - 03 - 2021

THURKAS EXPORTS
நிறுவனத்தின் உரிமையாளர்
திரு.சிவஞானம் கஜரூபன் அவர்களின்
அன்புத் தந்தையார்

**நாகநாதர் சிவஞானம் (ராசா)**

(ஓய்வு பெற்ற CTB காப்பாளர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்
THURKAS EXPORTS
ALUKKAI, ALAVEDDY.

New Science World
பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்
2023 A/L Classes
கணித விஞ்ஞான பிரிவு
For Tamil and English Medium

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. R.குமரன்<br>திரு. R.குகன் |
| இரசாயனவியல் | திரு. டயஸ்<br>திரு. K.T.சிவகுமார் |
| உயிரியல் | திரு. N.T.கஜேந்திரன் |
| இணை.கணிதம் | திரு. S.S.செந்தில்ராஜ்<br>திரு. K.ஐங்கரன் |

சமூக இடைவெளியுடன் நேரடி வகுப்புக்களும்
ZOOM இன் ஊடான இணைய
வழி வகுப்புக்களும்
ஆரம்பிக்கப்படவுள்ளன.
அனுமதிகள் இன்று வழங்கப்படுகின்றன.
ஆரம்பம்: 15.03.2021 திங்கட்கிழமை
தொடர்புகளுக்கு: 021 221 6690, 077 336 4055




## போக்குவரத்து மட்டுப்படுத்தல்

கொழும்பு,மார்ச் 12
ரயில் பாதையில் மேற்கொள்ளப்படும் திருத்தப் பணிகள் காரணமாக, நீர்கொழும்புக்கான வீதிப் போக்குவரத்து மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. நீர்கொழும்பு புனித ஜோசப் மாவத்தை ஊடாக நீர்கொழும்பு நகரம் வரையிலும் , நீர்கொழும்பி லிருந்து தெல்வத்த சந்தி முதல் பிரதான வீதி வரையி லும் போக்குவரத்து மட் டுப்படுத்தப்பட்டுள்ளது. நாளை காலை 8 மணி வரை இது நடை முறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. (சு-இ)



## நாடு திரும்பிய 42 பேருக்கு கொரோனா

கொழும்பு,மார்ச் 12
வெளிநாடுகளில் இருந்து நாடு திரும் பிய 42 இலங்கையர் களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது என்று கோவிட் - 19 தடுப்புக் கான தேசிய செயற் பாட்டு மையம் தெரி வித்துள்ளது.
கடந்த 24 மணித்தியா லங்களில் இவர்களுக் குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.
அதேவேளை இலங் கையில் இதுவரையில் 86 ஆயிரத்து 684 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று மையத்தின் அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது.(சு-இ)



சுகாதாரத் தொண்டர்கள்

# ஏ-9 வீதியை முடக்கி நேற்றுக் கவனவீர்ப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 12**
**வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக உண் ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள், ஏ-9 (யாழ்ப்பாணம் - கண்டி) பிரதான வீதியை மறித்து சில மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர். வாகனங்கள் மாற்று வழியூடாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டன.**

கடந்த முதலாம் திகதியிலிருந்து போராட்டத்தில் ஈடுபட்டுவந்த வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் தமக் கான தீர்வு குறித்து கவனம் செலுத்தப் படாத நிலையில் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் தமது போராட்ட வடிவத்தை உண்ணாவிரதப் போராட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்றனர்.
இந்த நிலையில் அவர்கள் நேற்றைய தினம் திடீரென ஏ - 9 வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் மயங்கி வீழ்ந்தார். இதன் பின்னர் ஏனையோர் ஆக்ரோசமாக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். பொலி ஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து போக்குவரத்தைச் சீர் செய்தனர். இதன் பின்னர் போராட்டக்காரர்கள் கலைந்து சென்று மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 2019ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநர் எடுத்த முயற்சியின் பயனாக தொண்டர்களாக கடமையாற்றிய சுகாதாரப் பணியாளர் களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் முகமாக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட் டன.
நியமனங்களில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளன என பாதிக்கப்பட்ட சுகா தார பணியாளர்கள் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக நியமனங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன. நிரந் தர நியமனக் கடிதம் பெற்ற சுகாதார பணி யாளர்கள் 454 பேர் தமக்கு உரிய தீர்வை வழங்குமாறு நீண்ட காலமாகக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (ஒ,20,319,320)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

## கொலை...

டுள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.
கிளிநொச்சி அம்பாள் குளத்தில் இருந்து நேற்றுமுன் தினம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. கிளி நொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் திலகேஸ்வரி (வயது-37) என்னும் ஒரு பிள்ளையின் தாயே சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.
இவரது உடல் மீட்கப்பட்டு உடற்கூற்றுச் சோத னைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், இவர் கொலை செய்யப்பட்டுக் குளத்தில் வீசப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது. பெண்ணின் தலையில் காயம் ஒன்று காணப்படுவதுடன், இவர் கர்ப்பமாக இருந் துள்ளார் என்றும் பரிசோதனையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-ஜ-113,6)

## தலையற்ற சடலம் மயானத்தில் அடக்கம்

கொழும்பு,மார்ச் 12
டாம் வீதியில் சூட்கேஸிலிருந்து, தலை துண்டிக்கப் பட்ட நிலையில் மீட்கப்பட்ட பெண்ணின் உடல், தெப்பனாவ பொது மயானத்தில் அடக்கம் செய் யப்பட்டது. பிரேத பரிசோதனைக்குப் பின்னர் சடலம் நேற்று முன்தினம் அவர்களின் உறவினர் களிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இரத்தினபுரி யைச் சேர்ந்த, கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் அஞ்சலிக்காக அவரது வீட்டில் வைக்கப் பட்டு, நேற்று அடக்கம் செய்யப்பட்டது.
அதேவேளை உயிரிழந்த பெண்ணின் தலைப்ப குதியைத் தேடி பொலிஸார் தொடர்ந்தும் விசார ணைகளை முன்னெடுத்துள்ளனர். அதற்காக புறக்கோட்டை மற்றும் ஹங்வெல்ல பகுதிகளில் பெறப்பட்ட சி.சி.ரீ.வி காணொலிப் பதிவுகளை பொலிஸார் மீண்டும் பரிசீலிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (சு-இ)

'பொ-பொ' பேரணி

# வேலன் சுவாமிகளிடம் வாக்குமூலம் பெற முயற்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 12
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையில் முன்னெடுக்கப்பட்ட பேரணி தொடர்பில், தவத்திரு வேலன் சுவாமிகளிடம் வாக்குமூலம் பெறுவதற்காக பொலிஸார் முயற்சித்தனர். எனினும் அவர் வாக்குமூலம் வழங்க மறுத்துவிட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை யான எழுச்சிப் பேரணிக்கு, தவத்திரு வேலன் சுவாமி களின் ஆதரவு பெரும் வலுச் சேர்த்தது. பேரணியில் பங் கேற்ற அரசியல் பிரமுகர்க ளிடம் பரவலாக வாக்குமூ லங்கள் பெறப்பட்டு வருகின் றன. இந்த நிலையில் கிளி நொச்சி பொலிஸார், வேலன் சுவாமிகளிடம் வாக்குமூலம் பெறு வதற்காக யாழ்ப்பா ணம் நல்லூரில் அமைந் துள்ள சிவகுரு ஆதீனத்துக் குச் சென்றிருந்தனர்.
எனினும், முன்கூட்டியே அறிவிக்கப்படாமையால், வாக்குமூலம் வழங்க முடி யாது என்று பொலிஸாருக்கு அவர் தெரிவித்துள்ளார். அதனால் பொலிஸார் திரும் பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (சு-இ)

# மனித உரிமைகளுக்கான ஆர்வலரை துன்புறுத்தாதீர்

### 8 நாடுகள் இணைந்து கோரிக்கை

கொழும்பு,மார்ச் 12
மனித உரிமைகளுக்காக முன் னிற்கும், சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் போன்றோரை துன்புறுத்தக்கூடாது. மாறாக அவர் களைப் பாதுகாக்க வேண்டும் என்று 8 நாடுகளின் மனித உரி மைகள் தூதுவர்கள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.
நெதர்லாந்து, ஜெர்மனி, இங்கி லாந்து, சுவீடன், எஸ்டோனியா, லித்துவேனியா, பின்லாந்து மற் றும் லக்சம்பர்க் ஆகிய நாடுகளின் மனித உரிமைகள் தூதுவர்களால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது.
மனித உரிமைகளுக்காகப் போராடு பவர்களைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பு. அவர்களைத் துன்புறுத் தலாகாது.
திறமை வாய்ந்த சட்டத்தரணியான ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளார். அது குறித்து கவலையடைந் துள்ளோம் என்றும் மனித உரி மைகளுக்கான தூதுவர்கள் தெரி வித்துள்ளனர். (சு-இ)

# இராணுவ வாகனம் மோதி பொலிஸ் சார்ஜென்ட் சாவு

கொழும்பு,மார்ச் 12
இராணுவ டிராக்டர் வாகனத்துடன், மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக் குள்ளானது. மோட்டார் சைக்கிளில் பய ணித்த பொலிஸ் சார்ஜென்ட் ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்து ஹபரண - பொலநறுவை வீதியில் மின்னேரியா பிரதேசத்தில் நேற்று நடந்துள்ளது. விபத்தில் காயமடைந்த பொலிஸ் சார் ஜென்ட் பொலநறுவை மருத்துவம னையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயி ரிழந்துள்ளார். உயிரிழந்த நபர் ஹபரண பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் 53 வயதான பொலிஸ் சார்ஜென்ட் என்று தெரிவிக்கப்படுகி றது. டிராக்டர் வாகனத்தைச் செலுத் திய இராணுவச் சிப்பாய் கைது செய் யப்பட்டுள்ளார். மேல திக விசாரணை களை மின்னேரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சு-இ)

## நுண்மிகள் பலவிதம்

இன்று ஒட்டுமொத்த உலகையும் உலுக்கிக் கொண்டிருக்கின்றது கொரோனா என்னும் நுண்மி(வைரஸ்). இந்த நுண்மியை அழிப்பதற்கு உலகம் ஓரணியில் திரண்டு பல மாதங்கள். பல முனைகளிலும் தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உலக சுகாதார நிறுவனம் உட்பட அனைத்து அமைப்புகளும் முழு வீச்சில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இதைவிடப் பேராபத்தைத் தரும் பிறிதொரு நுண்மி தொடர்பில் நாம் பெரிதாக சட்டைசெய்வதாகவோ கவனத்தில் எடுப்பதாகவோ இல்லை. அதுதான் 'நுண்கடன்'.


நுண்கடன்களால் நாட்டில் இதுகாறும் சுமார் 25 லட்சம் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேராசிரியருமான ஹரினி அமரசூரிய. சுமார் 200 பெண்கள் இந்த நுண்கடன்களால் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார் அவர். இலங்கையின் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் எவ்வளவு பாரதூரமான – மோசமான – எதிர்மறையான புள்ளிவிவரம் இது.

சிறிய தொகையை கடனாக வழங்கி, அதன் மூலம் பயனாளிகளை பொருளாதார ரீதியாக ,முன்னேற்றுவதே இந்த நுண்கடன் திட்டங்களின் நோக்கமாகச் சொல்லப்படுகின்றது. குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களை சுயதொழில் முனைவோராக மாற்றுவதே இதன் இன்னொரு இலக்கு. இந்தத் திட்டத்தை உலகில் முதன் முதலில் பங்களாதேஸின் 'கிராமின்' என்ற வங்கியே ஆரம்பித்தது. அதன் மூலம் பல வறிய குடும்பங்கள் சுயதொழிலில் ஈடுபட்டு வெற்றியும் கண்டன. அதன் பின்னர் பங்களாதேஸில் இருந்து வேறு சில வளர்ந்துவரும் நாடுகளுக்கும் இந்தத் திட்டம் பரவியது. ஆனால், இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கில் அதன் நிலைமை வேறு.

30 ஆண்டுகாலப் போர் வடக்கு – கிழக்கில் ஏராளமான குடும்பங்களை பொருளாதார முதுகெலும்பு அற்றவையாக ஆக்கிவிட்டுள்ளது. எக்கச்சக்கம் பெண்தலைமைக் குடும்பங்கள் இங்குள்ளன. போர்தின்று தீர்த்த மக்களை நுண்கடன்கள் தூக்கி நிறுத்தும் என நினைத்தால், அது மக்களை மிகப் பெரிய கடனாளிகளாக மாற்றி விட்டிருக்கின்றது என்பதே யதார்த்தம். வடக்கு – கிழக்கில் இந்த நுண்கடன் திட்டங்களை வழங்கும் நிறுவனங்கள், அதிகமாக பெண்களை இலக்காகக் கொண்டு இயங்க ஆரம்பிக்கின்றன. குடும்பத் தலைமைத்துவத்தை கவனிக்கும் பெண்களையே இந்தக் கடன்திட்டத்தில் அந்த நிறுவனங்கள் சிக்கவைக்கின்றன. அவர்களுக்கான கடன்களை முதலில் கொடை வள்ளல்கள் போல வாரி வழங்குகின்றன.ஆனால் கடனை மீளச் செலுத்தும்போது வேறு வகையில் அவர்களைக் கையாள முற்படுகின்றன இந்த நிறுவனங்கள். அதாவது கடன் கொடுக்கும்போது அதனை அன்பொழுக வழங்கும் இந்த நிதி நிறுவனங்கள், பின்னர் கொடூரமான முகத்துக்கு மாறி, பணத்தை அறவீடு செய்வதற்காக தரக்குறைவான நிலைக்குச் சென்றும் உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் கடன் வாங்கியவர்களை பாதிக்கும் வகையில் செயற்படத் தொடங்குகின்றன. இப்படி தொடர்ச்சியான நெருக்குதல்களால், ஒரு கட்டத்தில் தற்கொலைக்கும் பலர் தூண்டப்படுகின்றனர்.

2009க்கு முற்பட்ட காலத்தில் பணப்புழக்கம் குறைவாகக் காணப்பட்டது. இதன்போது மக்களது ஆடம்பரச் செலவுகளும் குறைவாகவே காணப்பட்டன.ஆனால் இப்போது அப்படியல்ல. நடுத்தர மற்றும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தோர் சுய தொழிலுக்காக வழங்கப்படுகின்ற கடன்களை தமது ஆடம்பரத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக பெற்றுக்கொள்கின்றன. பின்னர் குறித்த தொகையை மீள் செலுத்த முடியாமல் தடுமாறுகின்றனர். அல்லது மீள் செலுத்துவதற்காக இன்னுமொரு இடத்தில் கடன் வாங்குகிறார்கள். இதனால் மேலும்மேலும் கடனாளிகளாகின்றனரே தவிர, எவ்வித முன்னேற்றமும் ஏற்படுவதில்லை.

இன்னும் சொல்லப்போனால் நுண்கடன் திட்டங்களில் இருந்து காப்பாற்ற மக்களுக்கு இன்னுமோர் கடன் திட்டத்தை கொண்டு வரவேண்டிய நிலைமை உருவாகியிருக்கின்றது. நிதி நிறுவனங்களின் நுண்கடன் திட்டங்கள் அரசின் நேரடிப் பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டு நிறுவனங்களின் நடைமுறை, கடன் வாங்கும் முறை, பயனாளர்களின் தெரிவு, வட்டி வீதம் போன்ற பலவிடயங்கள் முறைப் படுத்தப்படாத பட்சத்தில், இந்த நுண்கடனால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடவே செய்யும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. தேவையில்லாத விடயங்களிலெல்லாம் தலையிட்டு தன் வித்துவத்தனத்தைக் காட்டும் அரசு இந்த நுண்கடன்களை பொதுமைப்பாடான வரையறைக்குள் கொண்டு வர வேண்டும். அதுவே காலத்தின் தேவையுமாகும். ஏனெனில் நுண்மியை விடவும் ஆபத்தானவை நுண்கடன்கள்.




## மிருசுவில் ராணுவக் கொலையாளிக்கு மன்னிப்பளித்தது கோத்தாவின் தவறு

**கொழும்பு, மார்ச் 12**

**மிருசுவில் படுகொலையுடன் தொடர்புபட்ட முன்னாள் இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பொதுமன்னிப்பு வழங்கியமை தவறான செயலாகும் என்று ஐ.நா.வுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியும், மூத்த இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
முன்னாள் இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு விசேட நீதிமன்றம் அல்லது சர்வதேச நீதிமன்றம் ஊடாக தண்டனை வழங்கப்படவில்லை. எமது நாட்டு நீதிமன்ற கட்டமைப்பின் பிரகாரமே தண்டனை வழங்கப்பட்டிருந்தது. ஆனால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அவருக்கு தவறான வகையில் பொதுமன்னிப்பு வழங்கினார். இவ்விவகாரமும் இன்று ஜெனிவாவில் எதிரொலிக்கின்றது.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு நல்லாட்சி அரசு இணை அனுசரணை வழங்கியமை தவறான செயலாகும். நல்லாட்சி அரசு அமைவதற்கு உதவிய இந்தியா கூட குறித்த பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. வாக்கெடுப்பின்போது விலகியிருந்தது. உள்ளக விசாரணைக்கு இருந்த வாய்ப்பை நல்லாட்சி அரசு தவறவிட்டது. என்றார். (ஓ.44)

## எதிரணியினரை பழிவாங்கும் அரசு

### சி.ஐ.டி வளாகத்தில் சீறினார் பொன்சேகா

கொழும்பு,மார்ச் 12
எதிரணி உறுப்பினர்களை அரசியல் ரீதியில் பழிவாங்கும் நடவடிக்கைக்கே தற்போதைய அரசு முன்னுரிமை வழங்கியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்கவுடன் குற்றப் புலனாய்வுப் பிரிவு வளாகத்துக்கு வருகை தந்திருந்த பொன்சேகா, ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் பலகோணங்களில் கருத்துகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்த அறிக்கை தொடர்பில் மக்கள் மத்தியில் திருப்தி இல்லை. தாக்குதலின் பின்னணி என்ன, பிரதான சூத்திரதாரி யார் என்பதைக் கண்டறிய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே மக்கள் இருக்கின்றனர்.

சமூக வலைத்தளங்களில் பல்வேறு கருத்துக்கள் வெளிவருகின்றன. ஊடகங்களிலும் வெளியாகின்றன. அந்த வகையிலேயே அசோக அபேசிங்கவும் கருத்து வெளியிட்டார். அதனை சல்லடையிடுவதற்கு அரச தரப்பினர் தயாராகி வருகின்றனர் என்பது புலனாகின்றது. எதிரணி அரசியல்வாதிகளை இவ்வாறு இரவு, பகலாக விசாரணைக்கு அழைத்து, அரசியல் இலாபம் தேடுவதற்கு அரசு முயற்சிக்கின்றது- என்றார். (சு-44)

## அசோக அபேசிங்கவிடம் சி.ஐ.டியினர் விசாரணை

### பரிவாரங்களும் களத்துக்கு

கொழும்பு,மார்ச் 12
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்கவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று வாக்குமூலம் பதிவு செய்தனர்.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பஸில் ராஜபக்ச ஆகியோரைத் தொடர்புபடுத்தி அவர் வெளியிட்ட கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு சில தரப்புகளால் ஏற்கனவே சி.ஐ.டி.யில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறான தொரு பின்புலத்திலேயே வாக்குமூலம் பெறுவதற்காக, அசோக அபேசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், அவர் நேற்றுமுன்தினம் சி.ஐ.டியில் முன்னிலையாக வில்லை. இந்நிலையில் நேற்று சி.ஐ.டியில் முன்னிலையானார். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் சரத் பொன்சேகா உள்ளிட்ட பிரமுகர்களும் அசோக அபேசிங்கவுடன் சி.ஐ.டி வளாகத்துக்கு வந்திருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-44)

# 69 லட்சம் மக்களை ஏமாற்றி கைப்பற்றப்பட்ட ஆட்சியே இது!

## பிரதிபலன் தெரிகின்றது என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 12

**69 இலட்சம் மக்களையும் ஏமாற்றி, ஆட்சி அமைத்துக் கொண்ட தற்போதைய அரசு, தொடர்ந்தும் மக்களை ஏமாற்றும் வகையிலான செயற்பாடுகளிலேயே ஈடுபட்டு வருகின்றது. அன்று மக்கள் எடுத்த முடிவின் விளைவுகள் நாட்டில் இன்று பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளன.**



இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, மக்கள் தொடர்பில் சிந்திக்காமல் நாட்டின் தலைவர் 'கிராமத்துடன் உரையாடல்' எனும் போர்வையில் கிராமங்கள் தோறும் செல்கின்றார். சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.

அரசு கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு பதிலாக, அதனை மேலும் பரவலடையச் செய்துள்ளது. சுகாதார அமைச்சர் ஒரு நிலைப்பாட்டையும், கொவிட் தடுப்புக்கான அமைச்சர் இன்னுமொரு நிலைப்பாட்டையும் கொண்டுள்ளனர். மறுபுறத்தில் அதிகாரிகள் வேறு வகையான நிலைப்பாட்டில் செயற்பட்டு வருகின்றனர். இதனால் தொற்று இன்னும் பரவலடைகிறது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் எமது அரசின் மீது பெரும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த மோசடியை 'பட்டப் பகலில் இடம்பெற்ற பெரும் கொள்ளை' என்று தெரிவித்து நல்லாட்சி அரசை விமர்சித்தனர்.

எனினும் அரசு துரிதமாக அது தொடர்பில் நடவடிக்கை எடுத்தது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான 12 மில்லியன் ரூபா நிதியை மத்திய வங்கியில் தடுத்து வைக்கவும் நடவடிக்கை எடுத்திருந்தது. ஆனால் தற்போதைய அரசில் சீனி இறக்குமதியின் போது பெரும் மோசடி இடம்பெற்றுள்ளது.

இந்த மோசடியால் அரசுக்குக் கிடைக்க வேண்டிய 15.9 மில்லியன் ரூபா இலாபம் இல்லாமல் போயுள்ளது.

இந்த இலாபத்தை தமதாக்கிக் கொண்டவர்களை இனங்கண்டு, அவர்களிடமிருந்து அதனை மீளப் பெற்றுக்கொள்வதற்காக அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? இவ்வாறு மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளையே அரசு முன்னெடுத்து வருகின்றது - என்றார். (சு-இ)

---

# தினேஷ் குணவர்த்தனவை சாடும் மியான்மர் சமூக ஊடகங்கள்!

*'இராணுவ பாணியில்' இலங்கை செயற்படுவதால் அழைத்தீர்களா என்றும் கிண்டலடிப்பு*

கொழும்பு, மார்ச் 12

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை, மியான்மர் சமூக ஊடகவாசிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். அத்துடன், 'ஹாஷ் டேக்' ருவிற்றரில் இது பிரபலமாகியுள்ளது.

இலங்கையில் இராணுவப் பாணியிலான ஆட்சி நடப்பதால், மியான்மர் ஆட்சியாளர்களை அங்கீகரித்தீர்களா என்றும் சிலர் கோபாவேசமாக கேள்வியெழுப்பியுள்ளனர்.

மியான்மரின் இராணுவ ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட வெளிவிவகார அமைச்சர் வுன்னா முவாங் எல்வினை அங்கீகரித்து, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அண்மையில் அனுப்பிய கடிதத்தால் இந்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

வங்காள விரிகுடா பலதுறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு (பிம்ஸ்டெக்) மாநாடு அமைச்சர்கள் மட்டத்தில் நடைபெறவுள்ளது. மார்ச் 31 மற்றும் ஏப்ரல் முதலாம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் உரையாற்ற, எல்வினுக்கு கடிதம் மூலம், அமைச்சர் குணவர்த்தன அழைப்பு விடுத்துள்ளார்.

மியான்மரில் ஜனநாயக வழியில் தெரிவுசெய்யப்பட்ட அரசைக் கவிழ்த்து விட்டு, இராணுவ ஆட்சியாளர்கள் சட்டவிரோதமாக நாட்டை நிர்வகித்து வரும் நிலையில், உலக நாடுகளே கூட்டாக மியான்மரை எதிர்த்து வருகின்றன.

இந்நிலையில், மியான்மரின் இராணுவ அரசுக்கு அங்கீகாரமளிப்பதைப் போல இலங்கையின் வெளிவிவகார அமைச்சரின் அழைப்பு உள்ளதைச் சுட்டிக்காட்டும் மியான்மர் சமூக ஊடகவாசிகள், அழைப்பை இலங்கை அமைச்சர் மீளப்பெற வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறார்கள். (த-22)

---

# இலங்கை மாநாட்டுக்கு மியான்மரும் அழைப்பு

*வெளிவிவகார அமைச்சு விளக்கம்*

கொழும்பு, மார்ச் 12

பல்துறை தொழில்நுட்ப, பொருளாதாரக் கூட்டுறவுக்கான வங்காள விரிகுடா முயற்சிக்கு இலங்கை தலைமை தாங்குவதால், இந்த வருட இறுதியில் இலங்கையில் இடம்பெறுமென எதிர்பார்க்கப்பட்டுள்ள உச்சிமாநாட்டில், ஆவணங்களை இறுதிப்படுத்தும் நோக்குடனே மியான்மருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாநாட்டுக்கு மியான்மர் உள்ளிட்ட உறுப்பு நாடுகளுக்கு இலங்கை அழைப்பு விடுத்துள்ளமை தொடர்பில், சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள தகவல்களை, உறுதிப்படுத்தியுள்ள வெளிவிவகார அமைச்சு, அதனை ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளது. (சு-இ)

---

# சம்பளவு உயர்வை உறுதிப்படுத்தியமைக்கு நன்றி தெரிவிப்பு

ஹற்றன், மார்ச் 12

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக நிர்ணயித்து, வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானிக்கு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நன்றி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மகிந்த ராஜபக்ச, தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோருக்கு, கட்சியின் உபதலைவர் செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் காலிமுகத்திடலில் இடம்பெற்ற போராட்டம், தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம், ஊடகங்களின் விழிப்புணர்வுச் செயற்பாடுகள், சமூக வலைதளங்களில் பகிரப்பட்ட சாதகமான விடயங்கள் மற்றும் பல்வேறு தரப்பினர்களின் நேரடி, மறைமுக ஒத்துழைப்புகளால் தற்போது தொழிலாளர்களுக்கு நன்மை கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சு-இ)

---



# சிதம்பரபுரத்தில் காட்டுத் தீ பரவல்

## கட்டுப்படுத்தும் முயற்சியில் தீயணைப்பு பிரிவினர்

வவுனியா, மார்ச் 12

வவுனியா சிதம்பரபுரம் பழைய கற்குளம் கிராமத்துக்கு அருகேயுள்ள வனப்பகுதியில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீயணைப்பு பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த வனப்பகுதியிலிருந்து புகை வருவதை அவதானித்த அயலவர்கள் அதன் அருகே சென்று பார்வையிட்டபோது வனப்பகுதி தீப்பற்றி எரிந்து கொண்டிருந்துள்ளது. அதனையடுத்து வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினருக்கு தகவல் வழங்கியுள்ளனர். குறித்த பகுதிக்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். வவுனியாவில் நிலவி வருகின்ற அதிகூடிய வெப்பநிலையால் காட்டுத் தீ ஏற்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (வ-18)

---

# இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

**மருத்துவ முகாமும் இலவச மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் அரியாலை காந்தி சனசமூக நிலைய வெள்ளி விழா மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது. நல்லூர் லயனஸ் கழகத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் அரியாலை வட மேற்கு மூத்த பிரஜைகள் சங்கத்தினர் இதை நடத்தவுள்ளனர்.**

**கண் இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் பொது மருத்துவ பரிசோதனைகள் இதன்போது மேற்கொள்ளப்பட்டு பார்வையில் குறைபாடு காணப்படுவோருக்கு மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)**

## விவசாயிகளுக்கான கலந்துரையாடல்

கொடிகாமம், மார்ச் 12

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தின் பெரும்போக உத்தியோகத்தர் தலைமையில் எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை வளாகத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. எழுதுமட்டுவாழ் கமக்கார அமைப்புக்கு உட்பட்ட செட்டிகேணி, ஒட்டுவெளி, குஞ்சு விழுவளை மற்றும் பெரிய விழுவளை ஆகிய வயல் வெளிகளில் சிறுதானிய பயிர்ச்செய்கை செய்வது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது. விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (வ-159)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குப்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை பழம் வீதி ஞான சோதி சனசமூக நிலையத்திலும், 11 மணி தொடக்கம் மதியம் 1.30 மணி வரை சிவன் புது வீதியிலும்.பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மணல்தறை லேன் ஆகிய இடங்களிலும் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என்று மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (ஐ)

## அனுமதிப்பத்திரமின்றி சாரத்தியம்; மூவர் எச்சரிக்கையுடன் விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 12

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய மூவர் எச்சரிக்கையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிபதி சிவலிங்கம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது நீதிபதியால் குறித்த மூவருக்கும் எச்சரிக்கையுடன் கூடிய விடுதலை வழங்கப்பட்டது. இவ்வாறான அனேகமான வழக்குகள் கிடப்பில் உள்ளன என்பதைச் சுட்டிக்காட்டிய நீதிவான் இனி இவ்வாறான குற்றத்தில் ஈடுபட்டால் விளக்கமறியல் தண்டனை வழங்கப்படும் எனவும் எச்சரித்திருந்தார். (வ-319)

## சட்டவிரோத மணல் அகழ்வு; ரூ.50,000 தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றியவருக்கு நேற்றுமுன்தினம் யாழ்.நீதிவான் நீதிமன்று 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

நீதிபதி பி.ரி.சிவலிங்கம் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றத்தை சந்தேக நபர் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் அவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ச-320)

# ஆயிரம் ரூபாவை வழங்காவிடில் தண்டத்துடன் 6 மாதங்கள் சிறை

### தொழில் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு,மார்ச் 12

**பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்தச் சம்பளத்தை வழங்காது விட்டால், அந்த நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு தண்டம் விதிக்கப்படுவதுடன், 6 மாதங்கள் சிறைத்தண்டனை வழங்க நேரிடும் என்று தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.**

இந்த மார்ச் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற விதத்தில் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் நாளாந்தச் சம்பளமாக 900 ரூபாவும், வரவு செலவுத் திட்டச் சலுகைக் கொடுப்பனவாக 100 ரூபாவும் வழங்க வேண்டும் என்று வர்த்தமானியில் குறிப்பி டப்பட்டுள்ளது.

எனவே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளத்தை வழங்காது பின்னடிக்கும், தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-இ)

# விலங்கு விசர் நோய்த் தடுப்பூசியுடன் வேறு மருந்துகளை ஏற்ற வேண்டாம்

### வளர்ப்பு நாய்களின் உரிமையாளர்களுக்கு சுகாதார திணைக்களம் அறிவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 12

வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றும் வேளையில் வேறு எந்த தடுப்பு மருந்துகளையும் ஏற்ற வேண்டாம் என்று சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்து வழங்கப்பட்ட பின்னர், பல நாய்கள் வலிப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளன என்று நாய்களின் உரிமையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் சுகாதார திணைக்களத் தினருடன் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்து மட்டும் சுகாதாரத் திணைக்களத்தால் ஏற்றப்படுகிறது. அன்றைய தினமே குட்டை, கர்ப்பத் தடை மருந்துகள் ஏற்றக்கூடாது என்ற விழிப்புணர்வு நாய்களின் உரிமையாளர்களுக்கு இல்லை. இதன் காரணமாக அன்றையதினமே நாய்களுக்கு குட்டை மற்றும் கர்ப்பத் தடை மருந்துகளை ஏற்றுகின்றனர். அவற்றை ஏற்றுமாறு சுகாதார பகுதியினர் வலியுறுத்துவதில்லை. நாய்களின் உயிரிழப்புக்கு சுகாதாரத் திணைக்களத்தினர் பொறுப்பேற்க முடியாது என்றனர். (ஐ-9)

## நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவில் சேர்ந்த வர்த்தகர் கள் பயன்படுத்தும் நிறுவைகள், அளவைகள் மற்றும் நிறுக்கும் கருவிகள் ஆகியவற்றுக்கு முத்திரையிடப்படவுள்ளன.

மாவட்டச் செயலகத்தின் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவால் இம் மாதம் 15, 16, 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை அனைத்துத் தராசு படிகள், லீற்றர் அளவைகள் மற்றும் மீற்றர் கோல்கள் ஆகிய அளத்தல் கருவிகள் பரிசோதகரால் பரிசோதித்து முத்திரையிடப்படவுள்ளன.

முத்திரை பதிக்காது நிறுக்கும், அளக்கும் உபகரணங்களை வர்த்தகத்துக்குப் பாவிப்பது மாத்திரமல்ல, வைத்திருப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அனைத்து வர்த்தகர்களும் (ப.நோ.கூ.சங்கங்கள் சந்தை வியாபாரிகள் உட்பட) இதனை கருத்தில்கொண்டு இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களுடைய தராசுகள் மற்றும் அளவுகோல்களுக்கு முத்திரையிடுமாறு யாழ்ப்பாண வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஐ)

# வெளிநாட்டு பணியாளர்களை புத்தாண்டுக்குள் அழையுங்கள்

### ஜே.வி.பி.கோரிக்கை

கொழும்பு,மார்ச் 12

வெளிநாடுகளுக்குத் தொழில் தேடிச் சென்று, கொரோனாத் தொற்று நிலைமையில் அவதியுறும், இலங்கையர்களை, எதிர்வரும் தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கு முன்னதாக, நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கோரியுள்ளது. கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இதேவேளை, வெளிநாட்டுத் தூதுவர் காரியாலயங்களில் சேவையாற்றிய தேசிய நலன்புரி அதிகாரிகளை, நாட்டுக்கு அழைத்ததன் காரணமாக வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவன சங்கம் தெரிவித்துள்ளது. (க-இ)

## கொட்டப்படும் குப்பைகளால் மயானத்தில் சுகாதார சீர்கேடு

மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்தில் இனந்தெரியாதோரால் வாகனங்களில் கொண்டு வந்து கொட்டப்படும் குப்பைகளால் அருகில் உள்ள குடியிருப்புகள்,விவசாய நிலங்கள் மற்றும் வீதியில் பயணிப்போர் பெரும் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்நோக்குகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முதியோர்கள் மற்றும் சிறுவர்கள் பயன்படுத்தும் பம்போஸ் மற்றும் கால்நடைகள், பறவைகளின் கழிவுகள் போன்றவை கொட்டப்படுவதால், அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் சுகாதாரப் பகுதியினர் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-9)



புதுக்குடியிருப்பு, கைவேலி கிராமத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயோதிபர்களுக்கான உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. தாய்த்தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில் புலம்பெயர் நாட்டில் உள்ள குணரெத்தினம் குணசேகரரின் பிறந்த நாளை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-222)

# விதிமுறை மீறியவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிபதி சிவலிங்கம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் 10ஆம் திகதி வழக்கு விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்தத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ச-319)

# ஏமாற்றுவதற்கும் நோபல் உண்டெனில் அது சிங்களத் தலைமைகளுக்குத்தான்

## இலங்கை இந்து சமயப் பேரவை விளாசல்

**யாழ்ப்பாணம்,மார்ச் 12**

**இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து இன்றுவரை தமிழ்த் தலைவர்களை மட்டுமல்ல முழு உலகத்தையுமே ஏமாற்றிச் சாதனை படைத்த பெருமை, சிங்களத் தலைவர்களுக்கு உண்டு. இதற்கும் நோபல் பரிசு வழங்கும் திட்டமிருந்தால் அவர்கள் அதனையும் பெற்றுக்கொண்டிருப்பார்கள். இவ்வாறு இந்து சமயப்பேரவை தெரிவித்துள்ளது.**

பேரவை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

தமிழ் இளைஞர்கள் மேற்கொண்ட ஆயுதப் போராட்டத்தின் விளைவால். 1987 இல் மேற்கொண்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் இந்தியத் திருநாட்டையே ஏமாற்றிச் சாதனை படைத்ததோடுஅந்த நாட்டின் கண்ணியமான தலைவரான மரியாதைக்குரிய ராஜீவ்காந்தியை இந்தியா மட்டுமல்ல முழுஉலகமே இழந்தது. சிங்களத் தலைவர்கள் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்ப்பதில் நேர்மைத்தன்மையைப் பேணிஇருந்தால் இத்தகைய கதி இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்குமா? கொலைகாரர்கள் கொலைகாரர்கள்தான்.இளநீரும் சொக்கலேட்டும் பரிமாறியவர்கள் யாரென்பதை முழு உலகேஅறியும்.

ராஜீவ்காந்தியின்இழப்புக்கான தார்மிகப் பொறுப்பை பகிரங்கமாக இலங்கை அரசு ஏற்றே ஆகவேண்டும். அதுவே நீதியானதும்கூட அதைவிடுத்து நல்ல பிள்ளைகள் போல் நாடகமாடுவது எந்த நீதிக்குள்ளும் அடங்காது. இந்தியாவைத் துன்பப்படுத்தியவர்கள், ஐ.நாவிலும் தப்பிப் பிழைப்பார்கள் என்று எண்ணுவதில் எந்தத் தப்பும் இல்லை. என்றுள்ளது. (ஐ)

---

## செல்பி விவகாரம்: ராமநாயக்கவை சந்திக்கத் தடை

கொழும்பு,மார்ச் 12

தற்போது விளக்கமறியலில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை பார்வையாளர்கள் சந்திப்பதற்கு. இரண்டு வாரங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவைச் சந்திப்பதற்காகச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா அவருடன் செல்பி எடுத்திருந்தார். இதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் ஒழுக்காற்று நிலையத்துக்கு ரஞ்சன் ராமநாயக்க நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

அதன்போது தான் செல்பி எடுத்தமை தொடர்பான குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து சிறைக்கு வரும் பார்வையாளர்களைச் சந்திக்க ரஞ்சன் ராமநாயக்கவுக்கு இரண்டு வாரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அவருடன் செல்பி எடுப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சனவுக்கு அனுமதி வழங்கிய சிறைக்காவலர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

---

## அரசாங்கத்தை எவராலும் பலவீனப்படுத்த முடியாது

*பெரமுன உறுதி*

கொழும்பு,மார்ச் 12



ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பான அறிக்கையை வைத்து, அரசை எவராலும் பலவீனப்படுத்த முடியாது. விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இந்தத் தாக்குதல்களைத் தேர்தல் பிரசாரமாக்கி பொதுஜன பெரமுன ஆட்சியைக் கைப்பற்றவில்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த அரசு தேசிய பாதுகாப்பை அரசியல் நோக்கங்களுக்காக பலவீனப்படுத்தியதன் விளைவாகவே, ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் நாட்டில் அரங்கேற்றப்பட்டது. இஸ்லாமிய அடிப்படைவாதம் தலை தூக்கியுள்ளது.

பாரம்பரிய இஸ்லாமிய அடிப்படைவாதம், நவீன இஸ்லாமிய அடிப்படைவாதம் என இரு பிரிவுகள் காணப்படுகின்றன.

நவீன இஸ்லாமிய அடிப்படை வாதத்துடன் தொடர்புடையவர்கள் உலகளாவிய ரீதியில் பிரசித்தி பெற்ற கற்கை நெறிகளைப் பின்பற்றியுள்ளனர்.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலையும் நவீன இஸ்லாமிய அடிப்படைவாதிகளே நடத்தினர். ஆகவே நவீன அடிப்படை வாதம் குறித்து அரசு உரிய கவனம் செலுத்தும் - என்றார். (க-இ)

---



## வள்ளிபுரத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை

முல்லைத்தீவு, மார்ச் 12

சிவராத்திரியை முன்னிட்டு முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு வள்ளிபுரம் பகுதியில் உருத்திர சேனை அமைப்பால் சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

எமக்கு அருகில் சிவன் ஆலயம் இல்லை என்ற குறை இருந்ததுடன் மதமாற்ற அச்சுறுத்தலும் காணப்பட்டது. இந்நிலையில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டமை எமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர் என உருத்திரசேனை அமைப்பு தனது முகநூலில் பதிவிட்டுள்ளது. (வ-19)

---

## இ.போ.ச.அலுவலருக்கு கொரோனா: மருத்துவர் உட்பட ஐவர் தனிமையில்

சாவகச்சேரி, மார்ச் 12

கொடிகாமம், மிருசுவில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுச் சென்ற இ.போ.ச.அலுவலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, மருத்துவமனையில் கடமையாற்றும் மருத்துவர் உட்பட ஐவர் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த இ.போ.ச அலுவலர் கடந்த எட்டாம் திகதி காய்ச்சல் மற்றும் தடிமன் காரணமாக சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளார். மருத்துவரின் ஆலோசனைப்படி எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட வேளையில் அவருக்குத் தொற்று ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து அவருக்குச் சிகிச்சை வழங்கிய மருத்துவர் மற்றும் நான்கு பணியாளர்களும் சுகாதாரப் பிரிவினரால் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். (ஐ-9)

---



கொழும்பு நகரசபை பகுதியில் பொதுமக்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ச நேரில் சென்று பார்வையிட்டார். நாரஹென்பிட்டியில் அமைந்துள்ள அபயராம விகாரையில் ஆயிரத்து 200 பேருக்கு நேற்று தடுப்பூசி வழங்கப்பட்டது. அங்கு சென்ற பிரதமர், குறித்த திட்டத்தை மேற்பார்வை செய்தார். (வ-இ)

---



## தனிமைப்படுத்தல் நிறைவு; 214 பேர் வீடு திரும்பினர்

யாழ்ப்பாணம், மார்ச் 12

கொரோனாத் தொற்றுக் காரணமாக வசாவிளான் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 214 பேர் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

டுபாய்,குவைத், கட்டார் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்தவர்களே தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து நேற்று வீடு திரும்பினர்.

இரத்தினபுரி, அம்பாறை, பதுளை, அம்பாந்தோட்டை, புத்தளம் மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இவர்கள், தமது வீடுகளுக்கு செல்வதற்குரிய போக்குவரத்து வசதிகளை இராணுவத்தினர் ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர். (ஐ)

# சஹ்ரானுக்கு பணம் வழங்கியமை கோத்தாபயவுக்கும் தெரியும்!

## நாடாளுமன்றில் போட்டுடைத்தார் கபீர் ஹாசிம்

கொழும்பு, மார்ச் 12

**“மஹிந்த ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அரசாங்கம், சஹ்ரானுக்கு சம்பளம் வழங்கி வழிநடத்தி இருக்கின்றது. சஹ்ரானுக்கு சம்பளம் வழங்கினோம் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருந்தார். அப்படியென்றால் முன்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோத்தாபய ராஜபக்சவுக்கு தெரியப்படுத்திய பின்னரே பணம் வழங்கியிருக்க வேண்டும்” இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.**



நாடாளுமன்றத்தில், அரசு நேற்று முன்தினம் முன்வைத்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2011ஆம் ஆண்டில் இருந்து சஹ்ரானின் நடவடிக்கைகள் தொடர்பாக முஸ்லிம் அமைப்புகள் முறைப்பாடு செய்திருக்கின்றன. ஆனால் அப்போதைய அரசு அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்தக் காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தவர் கோத்தாபய ராஜபக்சவே என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

அத்துடன் இந்த தாக்குதலால் நன்மை அடைந்தவர்களே இதன் உண்மை நிலைமைகளை மறைக்க முயற்சிக்கின்றனர்.

மேலும் மைத்திரிபால சிறிசேன மற்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை கொலைசெய்யத் திட்டமிட்டிருந்தார் என்று நாமல் குமார செய்த முறைப்பாடு தொடர்பாக இன்று எந்த விசாரணையும் இடம்பெறுவதில்லை.

நாமல் குமாரவின் இந்த முறைப்பாடு காரணமாகத்தான் சஹ்ரான் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுவந்த பொலிஸ் அதிகாரி நாலக்க சில்வா கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். நாமல் குமாரவின் அந்த முறைப்பாடு இல்லாமல் இருந்திருந்தால் சஹ்ரான் கைதுசெய்யப்பட்டிருப்பார்.

எனவே, இந்தத் தாக்குதலின் பின்னால் யார் இருக்கின்றார் என்பதைக் கண்டறிந்து வெளிப்படுத்த வேண்டும். - என்றார். (கு-இ)

# வெளிப்படையான நீதிப்பொறிமுறை தேவை

## ஆயர் பேரவை அழுத்தம்

ஏப்ரல் 21 தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு விரைவானதும், வெளிப்படைத் தன்மை வாய்ந்ததுமான நீதிப்பொறி முறையொன்றை அரசு நடைமுறைப்படுத்தும் என்று எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியடையவுள்ள நிலையில், அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்துள்ளோம்.

பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புபட்டவர்கள் உரிய நேரத்தில் தமது கடமைகளைச் செய்வதற்குத் தவறியவர்கள், என்று பெயரிடப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரமும், சுதந்திரமும் சட்டமா அதிபருக்கு வழங்கப்பட வேண்டும். அதனைச் செய்வதற்கான நீதிப் பொறி முறை உடனடியாக நிர்ண யிக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (க-இ)

# விமலுக்கு எதிராக ரிஷாத் பொலிஸில் முறைப்பாடு

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரி சஹ்ரானையும் தன்னையும் தொடர்புபடுத்தி, அமைச்சர் விமல் வீரவன்ச வேண்டுமென்றே பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார் என்று தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத், இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரிக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளேன் என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் விமல் வீரவன்ச முன்னர் பல தடவைகள் என் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். இந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ‘இஸ்லாமிய அடிப்படைவாதம்: உயிர்த்த ஞாயிறு ஆணைக்குழுவுக்கு அப்பால்’ என்ற நிகழ்விலும் என் மீது தேவையற்ற குற்றச்சாட்டுகளைத் தெரிவித்துள்ளார். அதனால்தான் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளேன். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலும், சி.ஐ.டி யினரின் விசாரணைகளிலும் என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே பொய்யென நிரூபிக்கப்பட்டுள்ளன - என்றும் ரிஷாத் தெரிவித்தார். (த-56)

# தீக்கிரையான காருக்குள் சடலம் மீட்பு



கொழும்பு,மார்ச் 12

தீக்கிரையான கார் ஒன்றுக்குள் இருந்து சடலமொன்று மீட்கப்பட்டது. கொஹுவல, ஆசிரி மாவத்தையில் நேற்று முன்தினம் இரவு சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் களுபோவில பாத்தியா மாவத்தையைச் சேர்ந்த 33 வயதுடைய வர்த்தகர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை கொஹுவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-22)

# 1000 ரூபாவைக் கொடுப்போம் சிறப்புக் கொடுப்பனவு இயலாது

## முதலாளிமார் சம்மேளனம் அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 12

வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக ஆயிரம் ரூபா நாளாந்தச் சம்பளத்தை தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்போம். ஆனால் எம்மால் ஆயிரம் ரூபாவையும் கொடுத்து, சிறப்பு கொடுப்பனவுகளையும் கொடுக்க முடியாது.

இவ்வாறு முதலாளிமார் சம்மேளணம் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது.

சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் இராஜதுரை இது தொடர்பில் தெரிவித்ததாவது,

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளம் ஆயிரம் ரூபாவை வழங்க அரசு வலியுறுத்தியுள்ள காரணத்தால், எம்மால் கட்டளையை மீற முடியாது. நாம் நீண்ட நாள்களாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு எமது தரப்பு நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைத்துள்ளோம்.

ஆயிரம் ரூபா நாளாந்தக் கொடுப்பனவு சாத்தியமான ஒன்றல்ல என்பதே எமது நிலைப்பாடு. ஆயிரம் ரூபா வழங்க முடியாது. அதற்கு இணக்கம் தெரிவிக்க முடியாது என்ற உறுதியான நிலைப்பாட்டில் நாம் உள்ளோம்.

ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான தொகையைப் பெற்றுக்கொள்ளும் இலகுவான வழிமுறையை இதுவரை காலமாக நாம் அவர்களுக்குக் கொடுத்துள்ளோம். இப்போதும் தோட்டத் தொழிலாளர்கள் அவர்கள் கேட்கும் தொகைக்கு அதிகமாகவே சம்பாதிக்கின்றனர். ஆனால் தொழிற்சங்கங்கள் எமது திட்டத்தை விரும்பவில்லை.

எனவே இந்த மாதத்தில் இருந்து ஒரு சில மாதங்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தைக் கொடுத்துப் பார்ப்போம். எமது வருமானத்துக்கு இது சாத்தியமாக இல்லையென்றால், அடுத்த கட்டமாக மாற்று வழிமுறைகளைக் கையாள்வோம். குறைந்தபட்ச சம்பளத்தை மட்டுமே சம்பள நிர்ணய சபையால் தீர்மானிக்க முடியும். ஏனைய எந்த கொடுப்பனவுகளையும் வழங்குமாறு அவர்களால் வலியுறுத்த முடியாது. வேலை நாள்களில் குறைவு, அல்லது மேலதிக கொடுப்பனவுகளில் தளர்வுகள் செய்ய வேண்டிய நிலைமை உருவாகலாம். எவ்வாறு இருப்பினும் ஒரு சில மாதங்கள் நிலைமைகளைக் கண்காணித்து அடுத்த கட்டத்தில் மாற்று வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது குறித்து யோசிப்போம் - என்றார். (க-இ)

# கட்சியின் மத்திய குழுவை உடனடியாகக் கூட்டவும்

## தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் போர்க்கொடி

யாழ்ப்பாணம், மார்ச் 12

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுவைக் கூட்டுமாறு கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் கட்சியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரிக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தைக் கூட்டுமாறு கடந்த ஓகஸ்டில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பொதுச்சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். கடந்த செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபரில் கடிதம் மூலமாகவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இன்றுவரை அது குறித்து எதுவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இறுதியாக கடந்த மாதம் 24 ஆம் திகதி கட்சியின் யாப்பு விதிகளுக்க மைவாக தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக உறுப்பினர்களின் பதவிக்காலம் கடந்த 24ஆம் திகதியுடன் காலாவதியாகியுள்ளது. ஆகவே, கட்சியின் நலன்கருதி இந்தக் கடிதம் கிடைத்து 14 நாள்களுக்குள் கூட்டத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கட்சியின் உறுப்பினர்களால் பல முறை கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளபோதிலும் அதற்கு செவிமடுக்காது, கட்சியோடு சம்பந்தம் இல்லாத, கட்சி உறுப்பினர்கள் அல்லாத, எமது இனத்துக்கு விரோதமாக செயற்படுபவர்களின் கோரிக்கைக்கு அமைவாக ஏதோ ஓர் உள்நோக்கத்துடன் கடந்த ஜனவரி 28 ஆம் திகதி கிளிநொச்சியிலும் கடந்த 20ஆம் திகதி யாழ்ப்பாணம் அரியாலையிலும் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளீர்கள்.

கட்சியின் பொதுச் சபையினதோ அல்லது கட்சியின் மத்திய செயற்குழுவினதோ அங்கீகாரமோ, அனுமதியோ பெறப்படாமல் கட்சியின் அங்கத்தவர்கள் அல்லாதவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக கட்சியின் விதிமுறைகளுக்கு முரணாகச் செயற்பட்டு வருகின்றீர்கள். இது தனிப்பட்ட நலனின் அடிப்படையில் சர்வாதிகார போக்கைக் கடைப்பிடித்து அதிகார துஷ்பிரயோகம் செய்வதாகவே அமைகின்றது - என்றுள்ளது. (த-319)

# பெரும்பான்மையைத் தக்கவைக்க மைத்திரியை பாதுகாக்க முயற்சி

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



**கொழும்பு,மார்ச் 12**

**சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசில் இருந்து வெளியேறினால், இந்த அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல் போய்விடும். அதனால்தான் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது.**

இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையின்போது உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதாகத் தெரிவித்து, தாக்குதலில் மரணித்தவர்களின் சடலங்களை வைத்து பிரசாரம் செய்து, ஆட்சிக்கு வந்துள்ள இந்த அரசு, தற்போது விசாரணை அறிக்கையை மறைத்து வருகின்றது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாகவிசாரணைமேற்கொண்டு வந்த அதிகாரிகளை சிறையில் அடைத்துள்ளது. அதேபோன்று தாக்குதலை அடிப்படையாகக் கொண்டு கத்தோலிக்க, முஸ்லிம் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தச் சபையிலும் அதனையே மேற்கொள்ள முயற்சிக்கின்றது.

குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுப்பதாக தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசு, இதுவரை ஒருவருக்கு எதிராகவேனும் வழக்குத் தாக்கல் செய்யவில்லை. தாக்குதலின் பின்னணியைத் தேடிக் கண்டுபிடித்து குற்றவாளிகளுக்கு இந்த அரசு ஒருபோதும் தண்டனை பெற்றுக்கொடுக்கப்போவதில்லை. அதனால் தான் கத்தோலிக்க சபை வரலாற்றில் முதல் தடவையாக கறுப்பு ஞாயிறு தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் இடம்பெறும் வரை அதனைத் தடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்தவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. அவர் தற்போது அரசுடன்தான் இருக்கின்றார். அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு அச்சப்படுகின்றது- என்றார். (க-இ)

# தவறுகளைத் திருத்தாவிடில் போராடும் நிலை வரலாம்

## அரசை ஆதரித்த ஆனந்ததேரர் எச்சரிக்கை

அரசுதான் செய்த தவறுகளைத் திருத்திச்செயற்பட வேண் டும். இல்லாவிடின் நாட்டு மக்களுடன் ஒன்றிணைந்து, அரசுக்கு எதிராகப் போராட வேண்டிய நிலை ஏற்படும். அரசின் குறைகளைச் சுட்டிக் காட்டி, அரச தலைவர்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பு மதத் தலைவர்களுக்கு உண்டு என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரித்துள்ளார்.

அபயராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறுகிய காலத்தில் அரசு மக்களின் வெறுப்பை சம்பாதித்துள்ளது. அமைச்சுக்களின் செயலாளர்கள் உரிய காரணமின்றி இடமாற்றம் செய்யப்படுகின்றமை, அரசியல் அழுத்தங்களை அடிப்படையாகக் கொண்டதாகக் காணப்படுகிறது. ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முன்னின்று செயற்பட்ட எம்மிடம் மக்கள் கேள்வி கேட்கின்றனர். மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரை ஆட்சிக்குக் கொண்டுவர முன்னின்று செயற்பட்டிருந்தோம் அரசில் இடம்பெறும் ஒரு சில செயற்பாடுகளைப் பார்த்து மௌனம் காப்பது பொருத்தமற்றதாகும். உரிய தீர்மானத்தை சிறந்த முறையில் எடுக்க வேண்டும் - என்றார். (க-இ)

# ஹிட்லரின் வழியில் நகரும் கோத்தா அரசு

## ஊடகங்களையும் அடக்குகிறது என ஐ.ம.ச. குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 12

ஹிட்லரின் ஏகாதிபத்திய ஆட்சியை முன்னுதாரணமாகக் கொண்டு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான ஆட்சி முன்னெடுக்கப்படுகிறது. தனது மோசடிகள் வெளிவரும் என்ற அச்சத்தில் அரசு ஊடகங்களையும் அடக்க முயல்கிறது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசால் முன்னெடுக்கப்படும் மோசடிகள் குறித்து வெளிப்படுத்துவதற்கு எமக்குள்ள ஒரே களம் நாடாளுமன்று. ஆனால் தற்போது மிகவும் சூட்சுமமான முறையில் நாடாளுமன்றம் கூடும் நேரம் குறைக்கப்பட்டுள்ளது. அமர்வுகளுக்கான தினங்கள் குறைக்கப்பட்டுள்ளன. இயன்றவரை நாடாளுமன்றத்தைக் கூட்டாமலிருப்பதையே இவர்கள் விரும்புகின்றனர்.

எமக்கு மாத்திரமல்ல. நாடாளுமன்ற செய்தியாளர்களுக்கும் செய்தி சேகரிக்க இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை. நாடாளுமன்றில் பேசப்படும் விடயங்கள் அரசுக்குப் பாதகத்தை ஏற்படுத்தும் என்பதை அரசு அறியும். இவற்றை மக்கள் அறிந்து கொள்வதைத் தவிர்ப்பதற்காகவே ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களின் உரிமைகளும் மீறப்பட்டுள்ளன. இதனையே ஹிட்லரும் செய்தார். அவர் ஜனநாயக ரீதியாக ஆட்சியைக் கைப்பற்றினார். அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் நாளாந்தம் நாடாளுமன்றத்தைப் பல வீனமடையச் செய்தார். இறுதியாக நாடாளுமன்றையே தீக்கிரையாக்கினார். அதன் பின்னரே சர்வாதிகார ஆட்சியை முன்னெடுத்தார். ஹிட்லரின் ஏகாதிபத்திய ஆட்சியை முன்னுதாரணமாகக் கொண்டு தான் ஜனாதிபதி கோத்தாபய தலைமையிலான ஆட்சி முன்னெடுக்கப்படுகிறது.

அரசின் செயற்பாடுகளை விமர்சிக்கும் எதிர்க்கட்சியினரைப் பழிவாங்கும் நோக்கிலேயே அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது- என்றார். (க-இ)

# கனடா செல்ல முயற்சி: 24 பேர் மடக்கிப் பிடிப்பு

புத்தளம்,மார்ச் 12

கடல் வழியாக, சட்டவிரோதமான முறையில் கனடாவுக்குச் செல்ல முயற்சித்த குற்றச்சாட்டில், 24 பேர் கடற்படையினரால் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டனர்.

கற்பிட்டி குரக்கன்ஹேன பிரதேசத்தில் உள்ள விடுதியில் தங்கியிருந்த 24 பேர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் அனைவரும் மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். சிறு பிள்ளைகள் இருவர், பெண் ஒருவர் உட்பட 24 பேர் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். (க-இ)

# ரஷ்யாவின் தடுப்பூசிக்கு ஔடத சபை அங்கீகாரம்

கொழும்பு,மார்ச் 12

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் "ஸ்புட்னிக் வி" கொரோனாத் தடுப்பூசிக்கு ஔடத ஒழுங்குறுத்தல் அதிகார சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அந்தத் தடுப்பூசி விரைவில் இலங்கைக்குக் கிடைக்கும் என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல்கட்ட தடுப்பூசிகளை நாட்டுக்குப் பெறமுடிந்தது. மறுநாளே தடுப்பூசி ஏற்றும் பணியும் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொவிஷீல்ட் அஸ்ட்ராஜெனகா ரக தடுப்பூசிகள் 5 லட்சம் எமக்குக் கிடைத்தன.

எதிர்வரும் இரண்டு வாரத்துக்குள் மேலும் ஐந்து லட்சம் தடுப்பூசிகள் எமக்குக் கிடைக்கவுள்ளது.

அத்துடன், ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஸ்புட்னிக் தடுப்பூசிகள், இலங்கைக்கு மிக விரைவில் முதற்கட்டமாக நன்கொடையாகக் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# ஏப்.21 தாக்குதல்கள் சிறப்பு விசாரணைக்கு

## சட்டமா அதிபர் ஆலோசனை

கொழும்பு,மார்ச் 12

ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பில் சிறப்பு விசாரணைகளை முன்னெடுக்குமாறு, சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, பொலிஸ்மா அதிபருக்கு ஆலோ சனைகளை வழங்கியுள்ளார்.

இந்த தாக்குதல்களுக்குத் தலைவனாகச் செயற்பட்டதாக நம்பப்படும் சஹ்ரான் ஹஷீம், அவரது சகோதரர் ரில்வான் மற்றும் தேசிய தௌஹீத் ஜமா அத்தின் சிரேஷ்ட தலைவராகக் கருதப்படும் நௌபர் மௌலவி ஆகியோர் மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணிய, இந்திய மாநில உளவுத் துறை ஒன்றின் அபூ ஹிந் எனும் பெயரால் அறியப்படும் நபர் தொடர்பிலும், மேலும் நால்வர் தொடர்பிலும் சிறப்பு விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அபு ஹிந், அஹமட் தாலிப் லுக்மன் தாலிப், அவரது மகனான லுக்மான் தாலிப் அஹமட் எனும் அபூ அப்துல்லாஹ், ரிம்சான், புலஸ்தினி மகேந்திரன் எனும் சாரா ஜஸ்மின் ஆகியோர் தொடர்பிலும் சிறப்பு விசாரணைகளை நடத்துமாறு, சட்டமா அதிபரால் ஆலோசனை வழங்கப்பட்டது என்று சட்டமா அதிபரின் செய்தித் தொடர்பாளர், அரச சட்டவாதி நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார். (க-இ)

# பரீட்சையில் ஆள்மாறட்டம் நால்வர் கைது

கொழும்பு,மார்ச் 12

நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்து, பரீட்சை எழுத முற்பட்ட குற்றச்சாட்டில் நால்வர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், வலஸ்முல்ல, பலாங்கொட மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

## இன்றைய நாள்

**மேடம்:** எதையும் திட்டமிடுதல் அவசியம். குழப்பங்கள் விலகும். தொழிலில் சுமாரான வளர்ச்சியைப் பெறுவீர்கள். கலகலப்பு கூடும். பெரிய செலவுகளைத் திட்டமிட்டுச் செய்வது நல்லது.

**இடபம்:** இதுவரை இருந்து வந்த தடை விலகும். நிம்மதி கிடைக்கும். பணியில் பிரச்சினை வந்தாலும் திறமை, உங்களைக் கைவிடாது. எதிர்பார்த்த கடன் உதவி கிடைக்கலாம்.

**மிதுனம்:** பணியில், தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். இளைஞர்கள் சாதிக்க நினைத்து முயற்சிகள் செய்வர். திருப்தி தரும் நாள். மன வலி தீர்க்கும் சம்பவம் நடக்கும்.

**கடகம்:**அவசர முடிவு எடுக்க வேண்டாம். பணியில் கவனம் தேவை. மகிழ்ச்சியை மீறி சிறு உறுத்தல் இருக்கும். பேச்சில் கவனமாக இருங்கள். பலர் கேலி செய்த நிலை மாறி பாராட்டு கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்

**சிம்மம்:**இளைஞர்களின் மனதில் புதியதோர் தன்னம்பிக்கை மலரும். பொறுமைக்கு பலன் உண்டு. சுபநிகழ்ச்சிகளில் பங்கேற்க அழைப்பு வரும். கையிருப்பு கூடும். புதிய பொழுது போக்கில் ஈடுபாடு வரும்.

**கன்னி:** அனுபவசாலியின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது. சண்டைகளிலிருந்து விலகியிருங்கள். மனக்குறை தீரும். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி முன்னேறுவீரகள்.

**துலாம்:** தனலாபம் கிடைக்கும். மருத்துவச் செலவு ஏற்பட வாய்ப்புண்டு. நண்பருடன் மோதல் வந்து நீங்கும். பொறுமை அதிகரிக்கும். முயற்சிகளால் செயல்கள் முடியும்.

**விருச்சிகம்:** பொறுப்பாகப் பணி செய்து சாதகமான பலன் பெறுவீர்கள் வாழ்க்கைத்துணையின் ஆதரவு கூடும். குடும்பம் மகிழும். காத்திருந்த விடயத்துக்கு அனுமதி கிடைக்கும்..

**தனுசு:** பிரச்சினைகளைப் புறந்தள்ளி மனதிருப்தியுடன் வெற்றி பெறுவீர்கள். நண்பர்களுடன் பண விடயத்தில் இருந்த மனஸ்தாபம் நீங்கும். இயன்ற அளவில் அறப்பணி செய்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** செலவுகளால் சேமிப்பு கரையும். சவால்கள் நீங்கும். எதிரியின் மோதலை கவனமாக கடந்து செல்வீர்கள். எதிர்பார்த்த நல்ல விடயத்துக்கு பச்சை விளக்கு கிடைக்கும்.

**கும்பம்:** உறவினருடன் கடன் பற்றி பேசும்போது கோபப்பட வேண்டாம். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வதில் சங்கடம் நேரும். பணியாளர்கள் அதிக கவனத்துடன் உழைக்க வேண்டும்.

**மீனம்:** உடல்நலம் மேம்படும். தனலாபமும் உண்டாகும். முக்கிய வேலைகளைத் தள்ளிப்போடும் எண்ணம் வரும். நிலுவைப் பணிகள் முடியும். உத்தியோகத்தில் அதிகாரிகள் பாராட்டுவார்கள்.

# தேங்காய் எண்ணெயில் இரசாயன பதார்த்தங்கள்

## திருப்பியனுப்பப்பட்டன கொள்கலன்கள்

**கொழும்பு,மார்ச் 12**

**நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய்யில், புற்று நோயை ஏற்படுத்தும் இரசாயனப் பதார்த்தங்கள் காணப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.**

அதனால் அவை கடந்த 3 மாதங்களுக்குள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் உணவு நிர்வாகப்பிரிவின் அதிகாரிகள் முன்னெடுத்த பரிசோதனைகளில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தோனேஷியா மற்றும் பிலிப்பைன்ஸிலிருந்து எண்ணெய் கொள்கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் அடங்கிய மீன் கொள்கலன்களும் திருப்பி அனுப்பட்டுள்ளன. அவற்றில் ஆசனிக் மற்றும் பாதரசம் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளமை பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (க-இ)

## தவக்கால சிந்தனை

### உயிர் பறிப்பை நிறுத்துவோம்

உலகில் உற்பத்தியாகும் ஒவ்வொரு பொருளுக்கும் உற்பத்தி காலாவதி திகதிகள் பொறிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று இறைவனும் தமது படைப்புக்கெல்லாம் மகுடமான மனிதனைக் கருவிலே உருவாக்கு முன்பே பிறப்பு, இறப்புத் திகதிகளை முன்குறித்து வைத்துள்ளார்.


மனித உயிர்மூச்சும் ஆன்மாவும் அவனைப் படைத்த இறைவனுக்கே உரித்துடையதாகும். சட்டத்தைக் கையிலெடுக்க சட்டத்துறையை அன்றி தனி மனிதனுக்கு எவ்வித உரிமையும் இல்லை. அதேபோன்று ஒரு உயிரின் முடிவு நாளைத் தீர்மானிப்பது நீதிதேவனாகிய கடவுளின் பொறுப்பாகும்.

ஆனால் இன்று எம்மத்தியில் நடக்கும் வன்முறை உயிர்பறிப்புக்கள் இறைவனுக்கே சவாலாகவுள்ளன. எங்கு நோக்கினும் கொலை, சித்திரவதை, உயிர்மாய்ப்பு தொடர்ந்துகொண்டிருக்கிறது.

கொலை செய்யாதே, தீர்ப்பிடாதே என்கிறது புனித வேதகாமம். எந்த மதத்திலும் கொலைக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இவ்வாறான கொலைகள் மனிதத்தை இறைபோதனைகளை கேள்விக்குறியாக்குகின்றன. மனித உயிரின் பெறுமதியும், பந்தபாசங்களும், மனிதநேயமும் மரத்துப்போய்விட்ட சமுதாயம் உருவாகிக் கொண்டிருக்கின்றதா? என்று எண்ணத் தோன்றுகிறது.

**எஸ்.யேசுதாஸ்,**
கொழும்புத்துறை



# கொன்சியூலர் அலுவலகம் நாளை திருமலையில் திறப்பு

திருகோணமலை,மார்ச் 12

வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் வழிகாட்டுதலின் கீழ், பொதுமக்களுக்கு வழங்கும் சேவைகளின் செயற்றிறனையும், செயலாண்மையையும் மேம்படுத்தும் நோக்கில் பிராந்திய கொன்சியூலர் அலுவலகமொன்று திறக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு திருகோணமலை மாவட்டத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது. (ஐ-இ)

# சாவுடன் போராடினேன்: மனம் திறந்தார் பவித்ரா

கொழும்பு,மார்ச் 12

நான் வாழ்க்கைக்கும் சாவுக்கும் இடையில் போராடினேன். எனது உடல்நிலை மோசமடைந்து வருவதை என்னால் நேரடியாகக் காண முடிந்தது. மறுநாள் காலை வரை உயிருக்காகப் போராடினேன். இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். இவர் கடந்த ஜனவரி 23 ஆம் திகதி கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு, தேசிய தொற்றுநோயியல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சில வாரங்களாக சிகிச்சை பெற்று வந்தார். பின்னர் குணமடைந்து வீடு திரும்பினார். இந்த நிலையில் தனது அனுபவத்தை அவர் ஊடகங்களிடம் பகிர்ந்துள்ளார். (க-இ)

# கடன் நெருக்கடியால் கடைக்குத் தீ வைப்பு

## சந்தேகநபர் கைது

கொழும்பு,மார்ச் 12

கடையொன்றிலிருந்து கடனுக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்ய நபர், கடன் தொகை அதிகரித்ததால், கடனுக்கு ஆதா ரமான கணக்குக் கொப்பியை அழிக்கும் நோக்கத்துடன் கடைக்குத் தீ வைத்துள்ளார். இந்தச் சம்பவம் களுத்துறை, தர்கா நகர் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை நடந்துள்ளது.

எரிவாயு சிலிண்டர்கள் தீப்பற்றியதால் வர்த்தக நிலையத்துக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. பொலிஸார், பொதுமக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். வர்த்தகருக்கு சுமார் 2.5 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டது. கடையின் பின்பகுதியில் தடயப்பொருள்கள் மீட்கப்பட்டன. பொலிஸ் மோப்பநாய் மூலம், அந்த பகுதியில் வசிக்கும் 35 வயதான நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். தானே கடைக்குத் தீ வைத்தேன் என்பதை அவர் ஒப்புக் கொண்டார்.(க-இ)

# காலத்தை இழுத்தடிப்பதே கோத்தா அரசின் நோக்கம்

## கிறிஸ்தவர்களை வீதிக்கு இறங்குமாறு அறைகூவல் விடுக்கிறார் சந்திரிகா

**கொழும்பு, மார்ச் 12**

**ஜனாதிபதி ஒருவர் நியமித்த ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை ஆராய்வதற்கு மற்றொரு ஜனாதிபதி புதிதாக ஆணைக்குழு அமைத்த வரலாறு இலங்கையில்தான் பதிவாகியுள்ளது. காலத்தை இழுத்தடிப்பதற்கே கோத்தாபய அரசு இவ்வாறு செய்துள்ளது. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில், ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன இருந்தபோது நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணையின் அறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் நியாயமானவை. பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். உங்களை வைத்துத்தான் இவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். இப்படியாக பொய்யான ஆட்சிக்கு வந்து பிரதான குற்றவாளிகளை மறைத்து அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற இந்த அரசை விரட்டியடிக்க நீங்கள் வீதியில் இறங்கவேண்டும். அதே போன்று பௌத்த, இந்து, இஸ்லாமிய மக்களும் அவர்களுடன் கைகோர்க்கவேண்டும்.

இன ரீதியான, மத ரீதியான வெறுப்பூட்டும் பரப்புரைகளை மேற்கொண்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய இந்த அரசின் போலி முகத்திரையை நாட்டு மக்கள் கிழித்தெறிய வேண்டும்.

ஜனாதிபதி ஒருவர் நியமித்த ஆணைக்குழுவை ஆராய மற்றொரு ஜனாதிபதி புதிய ஆணைக்குழுவை நியமித்த வரலாற்றில் இலங்கை இடம்பிடித்துள்ளது. பிரயோசனமற்ற விசாரணை அறிக்கையைக் கொண்டு காலத்தை இழுத்தடிப்பதுதான் இந்த அரசின் நோக்கம். அதற்கு நாட்டு மக்கள் இடம்கொடுக்கக் கூடாது. அரசுக்கு எதிரான போராட்டத்தை வலுமிக்க தாக்க வேண்டும்- என்றார். (ஒ,22)

## பிரித்தானியர் வழங்கிய சுதந்திரத்தை இராணுவத்தினர் பறித்து விட்டனரா?

கேள்வி எழுப்புகிறார் அஸாத் சாலி

கொழும்பு,மார்ச் 12



நாடு தற்போது இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவலை எவ்வாறு எதிர்கொள்வது, அதற்கு மத்தியில் எவ்வாறு தொழிலுக்கு, பாடசாலைக்குச் செல்வது மற்றும் எத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுவது என்பவை தொடர்பில் இராணுவத்தினர் மக்களுக்குக் கற்பிக்கின்றனர். இவ்வாறு இருக்கும் போது எமக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டதா? என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. மக்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் மற்றும் மேற்கு முனையம் என்பவை முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளன. இந்தியாவில் அதானி நிறுவனத்துக்கு எதிராக மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில், தனிப்பட்ட 'டீல்' ஒன்றின் ஊடாக அந்த நிறுவனத்துக்கு மேற்கு முனையத்தை வழங்குவதற்கு அரசு முற்படுகின்றது.

அடுத்ததாக முஸ்லிம் விவாக மற்றும் விவகாரத்துச் சட்டங்களில் திருத்தங்களை ஏற்படுத்துவதற்கு முற்படுகின்றனர். இனவாதம் மேலோங்கும் போது முஸ்லிம் சட்டங்களை இலக்கு வைக்கின்றனர்.

முஸ்லிம் சட்டங்களை யார் மாற்றினாலும் நாங்கள் மாற்றிக் கொள்ளப்போவதில்லை. குர்ஆனும், ஹதீஸும், ஷரியாவுமே எமது சட்டம் என்றால், நாம் அதற்குத்தான் மதிப்பளிப்போமே தவிர, அரசின் சட்டங்களைக் கருத்திற் கொள்ள மாட்டோம். அரசின் சட்டம் என்பது அரசுக்கும், நாட்டுக்குமானது. தற்போது ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ச தெரிவாகியிருக்கிறார் என்பதற்காக எம்மால் எமது சட்டங்களை மாற்றிக் கொள்ள முடியாது-என்றார். (க-இ)

## மொட்டுவின் வேட்பாளர் பஸில் ராஜபக்சவே!!!

ஆருடம் கூறுகிறார் அநுரகுமார

கொழும்பு, மார்ச் 12

2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச போட்டியிடமாட்டார். பஸில் ராஜபக்சவே களமிறங்கக் கூடும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தகவல் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பஸில் ராஜபக்சவையும், பிபி ஜயசுந்தரவையும் வெளியேற்ற வேண்டும் என்று ஆளும் கட்சியிலுள்ள குழுவொன்று போராடுகின்றது. பொருளாதார நெருக்கடி காரணமாகவே இவ்வாறெல்லாம் நடக்கின்றது.

விமல் வீரவன்ச உள்ளிட்ட குழுவினர் அண்மையில் ஜனாதிபதியை சந்திக்கச் சென்றுள்ளனர். மொட்டுக் கட்சியின் தலைவராக மஹிந்த இருக்கட்டும், அக்கட்சி தலைமையில் அமையும் கூட்டணியில் தலைமைப் பதவியை நீங்கள் பொறுப்பெடுங்கள் என்று இதன்போது கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்த மாற்றம் நடந்தால் நாட்டில் பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமா? இல்லை. மாறாக விமல் தரப்பின் பிரச்சினைதான் தீரும். கோத்தாபய ராஜபக்சவிடம் இவ்வாறு கோரிக்கை முன்வைக்கப்பட்ட பின்னர், தன்னால் அரசியல் செய்ய முடியாது எனவும், அடுத்த தேர்தலில் தான் போட்டியிடமாட்டார் எனவும் கோத்தாபய பதிலளித்துள்ளார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களது வாக்குகளை பெறக்கூடிய வேட்பாளரையே தயார் செய்ய வேண்டும் எனவும் சந்திப்பில் கூறப்பட்டுள்ளது. அந்த வேட்பாளர் யார்? பஸில் என்பவரே அவர், என்றார் அநுர. (ஒ,44)

## குருந்தூர்மலை பிள்ளையாருக்கு 30 ஆண்டுகளின் பின் சிவராத்திரி

முல்லைத்தீவு, மார்ச் 12



முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை அடிவாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீகோணமடு பிள்ளையார் ஆலயத்தில் 30 ஆண்டுகளின் பின்னர் சிவராத்திரி விழாவில் மக்கள் கலந்துகொண்டுள்ளனர்.

முள்ளியவளை,தண்ணீரூற்று மற்றும் குமுழமுனை கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பலர் வழிபாடுகளில் கலந்து கொண்டனர். சிவராத்திரி விழாவை முன்னிட்டு பொலிஸாரும் படையினரும் அங்கு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர் என மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-19)

## வாழ்வாதார உதவி

வவுனியா,மார்ச் 12

வவுனியா சிதம்பரநகரைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

வெளிச்சம் அறக்கட்டளை நிறுவனம் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-222)

## ஆயிரம் ரூபாவை வழங்கி வேலையில் கைவைக்காதீர்

தொழிலாளர்கள் கோரிக்கை

கொழும்பு,மார்ச் 12

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டமைக்கு நன்றி. எனினும் ஆயிரம் ரூபாவை வழங்கிவிட்டு வேலை நாள்களில் கை வைத்தால் அதனை அனுமதிக்க முடியாது என்று பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்று பெருந்தோட்டத் தொழிலாளர்கள் 2014 ஆம் ஆண்டு முதல் போராடி வருகின்றனர். 6 ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்களுக்கு ஆயிரம் ரூபா கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. வேலை நாள்கள் குறைக்கப்படாமல், தொழில் சுமைகள் அதிகரிக்கப்படாமல் சம்பள உயர்வு வேண்டும் என்றே தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

எனவே தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் கூட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு, அது தொடர்ந்தும் நடைமுறையில் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-இ)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏப்ரலில் தடுப்பூசி

கொழும்பு,மார்ச் 12

பல்கலைக்கழக மாணவர்களுக்கான கொவிட் தடுப்பூசி ஏப்ரல் மாதம் முதல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அடுத்த மூன்று வாரங்களுக்குள் நாட்டிலுள்ள அனைத்துத் தேசிய பல்கலைக்கழகங்களையும் மீண்டும் திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். அதற்காக சுகாதார அதிகாரிகளிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். (க-இ)



# கே.கே.எஸ். யுனைற்ரெட் அணி கூடைப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 12
கே.கே.எஸ். யுனைற்ரெட் விளையாட்டுக் கழகம் நடத்திய கூடைப் பந்தாட்டத் தொடரில் கே.கே.எஸ். யுனைற்ரெட் அணியே கிண்ணம் வென்றது. யாழ்ப்பாணம் பழைய பூங்கா கூடைப்பந்தாட்டத் திடலில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் கே.கே.எஸ். யுனைற்ரெட் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் அணி மோதியது. இதில் 14:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸ் புளூஸ் அணி கிண்ணம் வென்றது. (ம-320)



# கே.சி.சி.சி. வைட்ஸ் மூன்றாவது இடம்!

யாழ்ப்பாணம், மார்ச் 12
கே.கே.எஸ். யுனைற்ரெட் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் கே.சி.சி.சி. வைட்ஸ் அணி மூன்றாம் இடத்தைப் பெற்றது.
மூன்றாம் இடத்துக்குரிய இந்த ஆட்டத்தில் கே.சி.சி.சி. வைட்ஸ் அணியை எதிர்த்து இந்து டெவில்ஸ் அணி மோதியது.
7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கே.சி.சி.சி. வைட்ஸ் அணி வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது. (ம-320)

## நீச்சல் பயிற்சிகள்!

முல்லைத்தீவு, மார்ச் 12
மாவட்ட விளையாட்டுப் பிரிவின் ஒழுங்குபடுத்தலில் 14 வயதுக்கு மேற்பட்ட முல்லைத்தீவு மாவட்ட வீர வீராங்கனைகளுக்கான நீச்சல் பயிற்சிகள் கிளிநொச்சி நீச்சல் தடா கத்தில் அண்மையில் நடைபெற்றன.
விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டத்தின் திறமையான வீரர்களை இனம்காணும் வகையில் இடம்பெற்ற இந்தப் பயிற்சியில் மாவட்டத்தில் பெருமளவான வீரர்கள் மற்றும் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்தனர். (ற-222)

## இந்தியா, இங்கிலாந்து ரி—20 தொடர் ஆரம்பம்

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடரின் முதலாவது ஆட்டம் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.
தொடரில் 5 ஆட்டங்கள். அனைத்து ஆட்டங்களும் அஹமதாபாத் மைதானத்திலேயே இடம்பெறவுள்ளன.
முன்னதாக இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை இந்திய அணி 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியதை அடுத்து இந்த ரி20 தொடர் இடம்பெறுகின்றது.
இந்த ஆட்டங்களுக்காக இரு அணிகளும் அண்மைய நாள்களாகக் கடும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. (ம)








# பமிலியன்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 12
கே.கே.எஸ். யுனைற்ரெட் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் பமிலியன்ஸ் அணி கிண்ணம் வென்றது.
ஓல்ட் பார்க் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் அணியும் சி.சி.சி. றெட் அணியும் மோதின. 14:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பமிலியன்ஸ் அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-320)



# ரவுன் புல்ஸ் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 12
கே.கே.எஸ். யுனைற்ரெட் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் ரவுன் புல்ஸ் அணி மூன்றாம் இடத்தைப் பெற்றது.
யாழ்ப்பாணம் பழைய பூங்கா கூடைப்பந்தாட்டத் திடலில் அண்மையில் இடம்பெற்ற இந்த மூன்றாம் இடத்துக்குரிய ஆட்டத்தில் ரவுன் புல்ஸ் அணியும் இந்து ஓல்ட் போய்ஸ் அணியும் மோதின.
21:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பிடித்தது ரவுன் புல்ஸ் அணி. (ம-320)



முல்லைத்தீவு மாவட்ட 15 வயதுக்குட்பட்ட கடினப்பந்து துடுப்பாட்ட அணிக்குத் தெரிவுசெய்யப்பட்ட வீரர்களுக்கான பயிற்சி முகாம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.
முள்ளியவளை டைமன் மைதானத்தில் வடமாகாண கடினப் பந்து பயிற்சியாளர் கங்காதரன், முல்லைத்தீவு மாவட்ட பயிற்சியாளர் செல்வகுமார் மற்றும் பாடசாலைகளின் பயிற்சியாளர்கள் இணைந்து மேற்படி பயிற்சிகளை வழங்கினார்கள். (ம-19)

# தமிழ்த் தேசியமும் அதை தற்காத்தலும்

■ சு.பிரஜீவன்ராம்

இன்று தமிழர்கள் மத்தியில் முணுமுணுக்கப்படும் ஒரு சொல் தமிழ்த்தேசியம். பெரும்பான்மையான மக்கள் இந்தச் சொல்லின் பொருள் என்னவென்ற புரிதலற்று, தமது உரையாடல்களில் பயன்படுத்துகின்றனர். சிலர் இதனை ஒரு குறித்த குழு என்ற ஒரு வரையறைக்குள் உட்படுத்த முயல்கின்றனர். வேறுசிலர், இது பிரிவினைவாத சிந்தனையின் வெளிப்பாடு எனக்கூறி தமிழ்த்தேசிய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். உண்மையில் தமிழ்த்தேசிய சிந்தனையின் அர்த்தம், பொருள், என்ன என்பது பற்றி ஆராய வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. தமிழ்த்தேசியம் பற்றிய பரிபூரண விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள தேசியம் பற்றிய புரிதல் அவசியமானது.

தேசம், தேசியவாதம் பற்றிய சிந்தனைகள் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இறைமை, ஜனநாயகம் பற்றிய கருத்தியல்களின் தோற்றத்துடன் தீவிரமாக வளர்ச்சியடைந்த சிந்தனைகளாக காணப்படுகின்றன. இவற்றின் முக்கிய இலக்கு மன்னராட்சி, காலனித்துவ, ஏகாதிபத்திய, குடியேற்ற வாதத்துக்கு எதிரான மக்கள் புரட்சியாக வெளிப்பட்டிருப்பதை பழைய வரலாற்றின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.



உலகில் காணப்படுகின்ற தொன்மையான இனங்களில் தமிழ் இனமும் ஒன்றாகும், எனினும் இன்றுவரை தெற்காசிய மண்ணில் தமிழ் மக்களின் உரிமை தொடர்ச்சியாக பல்வேறு விதமான அடக்குமுறைகளின் கீழ் திட்டமிட்ட வகையில் இன அடையாளத்தை இழப்பதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டு வருவதை பழைய வரலாறுகளில் இருந்து நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

### இரண்டு வடிவங்களில் நவகாலத்தில் தேசியம்

இன்றைய நவீன காலத்தில் தேசியம் என்பது இரு வேறுபட்ட வடிவங்களில் வெளிப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அடக்குமுறைக்கு எதிராக தன்னை ஒடுக்குகின்ற சக்திகளை எதிர்த்துப்போராடும் விடுதலை வேட்கை உடையதாகவும் மறுபுறம் அடக்குமுறைக்கான கருவியாகப் பிறதேசங்களின், இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்திச் சிறுபான்மை இனப்பிரிவுகளின் உரிமைகளை மறுக்கும் ஆதிக்கவாத சிந்தனை கொண்ட ஜனநாயக விரோத தேசியவாதமாகவும் அது வெளிப்படுகின்றது. உலகில் பெரும்பான்மையான நாடுகள் இனவாதம், மதவாதம், ஆதிக்கவாத சிந்தனைகளின் வெளிப்பாட்டால் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக தெற்காசிய நாடுகளில் இனம், மதம் என்பவை அரசியல் அதிகார மையத்தை கட்டுப்படுத்தக்கூடிய அளவு வலிமை பெற்றுக் காணப்படுகின்றன.

தெற்காசியாவில் தனித்துவமான பாரம்பரிய வரலாற்றைக் கொண்ட தமிழர்கள் பெரும்பான்மை இன மக்களின் அடக்குமுறையில் இருந்து விடுபட்டு தமது அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காவும், இனத்தின் இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ளவும், கலாசார பாரம்பரியங்களை மீள் கட்டமைப்புச் செய்து கொள்வதற்காகவும் தமிழ் மக்கள் மத்தியில் இயல்பாக உருவான தேசிய உணர்வே தமிழ்த்தேசிய சிந்தனையாகும்.

தமிழ்த்தேசியம் என்பது தனிநாடு என்ற மறைமுக பதத்தை தாங்கி நிற்பதாக பெரும்பான்மை இன மக்களால் விமர்சிக்கப்படுவதை அவதானிக்கக்கூடியதா உள்ளது. காணப்படுகின்றது. எனினும் யதார்த்தத்தில் தமிழ்த்தேசியம் வலியுறுத்துவது தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக கலாசார உரிமைகளை பரிபூரணமான முறையில் தமிழர்கள் அனுபவிப்பதற்கான உரிமையுடன் தமது தனித்துவமான கலாசாரத்தை பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு ஊடுகடத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. எனினும் இந்த உயரிய நோக்கத்தை அடைந்து கொள்ள தமிழ்த்தேசிய சிந்தனையாளர்கள் பலவிதமான சவால்களை எதிர்கொள்கின்றனர்.

### பலவீனப்படுத்தப்படும் தமிழ்த் தேசியம்

தமிழ்த்தேசிய சிந்தனையை பலவீனப்படுத்தும் காரணிகளாக நான்கு காரணிகளை இங்கு குறிப்பிட்டுக் கூறமுடியும். முதலாவது; தமிழ்த்தேசியத்தின் பங்காளர்களை அடையாளப்படுத்துவதில் முரண்பாடு காணப்படுகிறது. தமிழ்த்தேசிய தத்துவத்தை வெளிப்படுத்தி அந்தக் கருத்தியலை வலுப்படுத்த போராடுபவர்கள் மாத்திரமே தமிழ்த்தேசியவாதிகள் என்ற முத்திரையைக் குத்த பலர் முயல்கின்றனர். உண்மையில் ஒட்டுமொத்தச் தமிழ்ச் சமூகமும் யதார்த்தத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளத் தவறுகின்ற புள்ளி இங்கே ஆரம்பமாகின்றது. தமிழ்த்தேசியம் என்பது தமிழ் இனத்தின் நலனை முதன்மையாக கொண்டு செயற்படுகின்ற தமிழரின் உணர்வு வெளிப்பாடாகும் அந்தவகையில் தமிழ்த்தேசியவாதிகள் பெற்றுக்கொள்ளும் வெற்றி என்பது ஒரு குழுவின் வெற்றியாக எம்மால் அடையாளப்படுத்த முடியாது என்ற புரிதலை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இரண்டாவது, தமிழ்த்தேசியம் என்பது தமிழ் இனத்தின் உணர்வு வெளிப்பாடாக காணப்படுகின்ற போதிலும், சில தமிழ்த்தேசிய விரோதிகள் மற்றும் தமிழ்த் தேசியக் கொள்கையைப் பயன்படுத்தி இலாபம் ஈட்ட முயற்சிக்கும் கயவர்கள், தமிழ் மக்கள் மனதில் நாடு, பிரதேச, மத, சாதி பிரிவினைகளை தமிழ்த்தேசிய உணர்வுடன் முரண்படச் செய்வதன் மூலம் தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்த முயல்கின்றனர்.

அதேசமயம், தமிழ்த்தேசியம் பற்றிய தெளிவான புரிதலற்ற சில தமிழர்கள் தனிப்பட்ட ரீதியில் பெற்றுக்கொண்ட நாடு, சாதி, மத, பிரதேச பிரிவினைவாத வெறுப்புகளை தமிழ்த்தேசிய உணர்வுடன் ஒப்பீடு செய்வதன் மூலமாக தமிழ் இன உணர்வைத் தமது தனிப்பட்ட சமூக பிரச்சினைகளின் அடிப்படையில் பலவீனப்படுத்த முயல்கின்றனர்.

'பிறப்பால் நீ தமிழன் எனின் தமிழ்த்தேசியத்துக்கு நீ உருத்துடையவன்' என்பதை ஒவ்வொரு தமிழரும் உணர்தல் வேண்டும். தமிழன் என்ற இன அடையாளமே தமிழ்த்தேசியம் என்ற சிந்தனையை உருவாகியுள்ளது என ஒவ்வொரு தமிழரும் உணர்ந்து கொள்வதன் மூலமாக, தமிழ்த்தேசியம் என்பது உலகில் உள்ள அனைத்துத் தமிழர்களையும் உள்ளடக்கிய ஓர் வலுவான சிந்தனையாக தன்னை வடிவமைத்து கொள்வதுடன். இதன் மூலம் உலகெங்குமுள்ள தமிழர்களின் கருத்துக்களை ஒரு புள்ளியில் ஒன்றிணைக்க கூடிய ஓர் களத்தையும் உருவாக்க வாய்ப்பளிக்கின்றது. இவ்வாறான உலக தமிழர் ஒன்றிணைவு தமிழர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடியதாகவும், உலக அரங்கில் ஓர் இனத்தின் உரிமைக் குரல் ஓங்கி ஒலிக்கவும் வழிவகுக்கும்.

மூன்றாவது, பல தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர்கள் தமிழ்த்தேசியத்தில் உள்ள குறைகளை மட்டுமே சுட்டிகாட்டுவதில் அதிக அக்கறையுடன் செயற்படுகின்றார்களே தவிர அக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கான ஆக்கபூர்வமான சிந்தனைகளை முன்வைக்கத் தவறுகின்றனர். இதைமாற்றி தமிழ்த் தேசிய குறைபாடுகளுடன் அதனை நிவர்த்தி செய்யக்கூடிய வழிமுறைகளையும் சுட்டிக்காட்டுதல் தமிழ்த் தேசிய உணர்வைப் பலவீனப்படுத்தாது வலுவான நிலையைப் பெற்றுக்கொள்ள உதவும்.

நான்காவது, இன்று பல தமிழ் அரசியல்வாதிகள், அரசியல் விமர்சகர்கள் யூத தேசியவாதத்துடன் தமிழ்த்தேசியத்தை ஒப்பிட்டுப் பேச முயல்கின்றனர். இது முற்றிலும் தவறான போக்கு. அரசியல் என்பது காலம், புறச்சூழல், மக்களின் மனநிலை என்பவற்றுக்கு ஏற்ப நாளாந்தம் மாற்றமடையக் கூடியது. அந்தவகையில் தமிழ்த்தேசியம் என்பது, தனித்துவமான வரலாற்று, கலாசார பின்புலம் கொண்ட மக்களின், உணர்வு வெளிப்பாடாகக் காணப்படுகின்றது. இதனை ஏனைய இன தேசியவாத எழுச்சிகளுடன் ஒப்பிடுவது தமிழ்த்தேசிய கருத்தியலைப் பலவீனப்படுத்தி பல குழப்பங்கள் உருவாக வழிவகுக்கும்.

### தமிழ்த் தேசியம் பலமடைய...

உலகில் காணப்படுகின்ற தொன்மையான இனங்களில் தமிழ் இனமும் ஒன்றாகும், எனினும் இன்றுவரை தெற்காசிய மண்ணில் தமிழ் மக்களின் உரிமை தொடர்ச்சியாக பல்வேறு விதமான அடக்குமுறைகளின் கீழ் திட்டமிட்ட வகையில் இன அடையாளத்தை இழப்பதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டு வருவதை பழைய வரலாறுகளில் இருந்து நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். இவ்வாறான இன அடையாள அழிப்பில் இருந்து தமிழர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், அடிப்படை உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கும் தமிழ்த்தேசிய உணர்வின் அடிப்படையில் ஒவ்வொரு தமிழரும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகிறது. உலகில் ஏதோ ஒரு மூலையில் ஒரு தமிழன் பெற்றுக்கொள்ளும் வெற்றியை எம் இனத்தின் வெற்றியாகக் கொண்டாடும் அதே சமயம், ஒரு தமிழனின் உரிமை மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதை எதிர்த்து ஒட்டுமொத்த தமிழ் இனமும் குரல் கொடுக்க கூடிய தூய தமிழ்த் தேசிய உணர்வை உருவாக்க ஒவ்வொரு தமிழரும் சாதி, மத, பிரதேச, நாடு என்ற பிரிவினைவாத சிந்தனையிலிருந்து விடுபட்டு தமிழ் இன உணர்வின் அடிப்படையில் தமிழ்த் தேசியப் பாதையில் பயணிப்பதன் மூலமாக மட்டுமே தமிழ் இன இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.



# கற்கோவளம் கடற்கரை பாலம் பாவனைக்கு உதவாத வகையில் சேதம்!

*சீர்செய்து தரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை*

**யாழ்ப்பாணம், மார்ச் 12**

**பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கற்கோவளம் கடற்கரைக்குச் செல்லும் பாலம் பாவனைக்கு உதவாத வகையில் சேதமடைந்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

பருத்தித்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான குறித்த பாலம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் 15 லட்சம் ரூபா செலவில் 2017 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 2 ஆயிரத்து 500 மீனவர்கள் இந்தப் பாலத்தை பயன்படுத்தி வருகின்றனர். எனினும் தற்போது அந்தப் பாலம் முழுவதுமாக சேதமடைந்துள்ளது. 2019ஆம் ஆண்டு இந்தப் பாலம் முழு அளவில் இடிந்து விழுந்ததிலிருந்து பலகைகள் மற்றும் தகரங்கள் வைத்தே அந்தப் பாலத்தினூடாக போக்குவரத்தை மக்கள் மேற்கொள்கின்றனர்.

இது ஓர் ஆபத்தான போக்குவரத்து மார்க்கமாக உள்ளது என்றும் அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இது தொடர்பில் பலருக்குத் தெரியப்படுத்தியுள்ள போதிலும் அதனைச் சீரமைக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில் குறித்த பாலத்தின் கட்டுமானங்களை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.


பொதுமக்களின் கோரிக்கைகளை அடுத்து குறித்த பாலத்தை நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராஜா கஜேந்திரன், மாகாண சபை முன்னாள் உறுப்பினரான விந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவகச் செயற்பாட்டாளர் குணாளன் ஆகியோர் அண்மையில் சென்று பார்வையிட்டனர். (ம-வ)

## மன்னார் புகையித நிலையத்தில் இன்றிலிருந்து ஆசன முன்பதிவு

மன்னார், மார்ச் 12

மன்னார் ரயில் நிலையத்தில் இன்று தொடக்கம் ஆசன முற்பதிவுச் சேவை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசன முற்பதிவுச் சேவை தடைப் பட்டதால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் மன்னார் மாவட்ட செயலர் திருமதி ஸ்ரான்லி டீமெல்லின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதையடுத்து அவர் புகையிரத நிலையத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டார். முற்பதிவுக்கான இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறே தடங்கலுக்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. இந் நிலையில் மன்னார்மாவட்ட செயலர் மொபிட்டல் நிறுவனத்துடன் உடன் தொடர்புகொண்டார். இதையடுத்து இயந்திரத்தை உடன் சீர்திருத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் இன்று தொடக்கம் ஆசன முற்பதிவுகளை மேற் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை மன்னார் பிரதேச பிரிவில் பேசாலை ரயில்வே நிலையத்திலும் ஆசனப் பதிவுகளை பெறுவதில் பெரும் அசௌரியங்களுக்கு மக்கள் உள்ளாகி வருவகின்றனர் எனவும் இது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அப் பகுதி மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (வ-60)



## மாற்றுத்திறனாளிகளுக்கு நிதியுதவி வழங்கல்

முல்லைத்தீவு, மார்ச் 12

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழும் தெரிவுசெய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் பிள்ளைகளின் கல்வி மற்றும் ஏனைய தேவைகளுக்காக பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக நிதியுதவி வழங்கும் செயற்பாடு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் ஆரம்பமாக கடந்த 9ஆம் திகதி ஒட்டுசுட்டான் மற்றும் ஒலுமடு உபஅலுவலகங்களுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ஒட்டுசுட்டான் மற்றும் ஒலுமடு உப அலுவலகங்களில் வைத்து 12ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-13)

## கசிப்பு போத்தல்களை வைத்திருந்தவருக்கு ரூ. 10,000 தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

கசிப்புப் போத்தல்களை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கச்சாய் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் பத்தாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பதில் நீதிபதி சிவலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற வழக்கில் சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ச-319)

## நாட்டில் நீதி கிடைக்காமையாலேயே சர்வதேசத்தை நாடி நிற்கின்றோம்

*கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் தெரிவிப்பு*

மட்டக்களப்பு, மார்ச் 12

கடந்த 72 வருட காலமாக இந்த நாட்டில் நாங்கள் நீதியை கோரி வருகின்ற போதும், அதற்கான நீதி கிடைக்காத ஏமாற்றமான நிலையிலேயே இன்று சர்வதேசத்திடம் நீதி கோரி போராடிவருகின்றோம் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகளுக்கு நீதிவேண்டி முன்னெ டுக்கப்படும் உணவு தவிர்ப்பு போராட்டம் எட்டாவது நாளாகவும் மட்டக்களப்பில் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ஐ-150)

## மல்லாவிப் பொலிஸாரால் ரவிகரனிடம் வாக்குமூலம்

கிளிநொச்சி, மார்ச் 12

'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான' பேரணியில் பங்குகொண்டமை தொடர்பில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் நேற்றுமுன்தினம் 10ஆம் திகதி மல்லாவிப் பொலிஸார் வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை அவரது இல்லத்துக்குச் சென்ற பொலிஸார் அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளனர். (ச-13)

# கல்லுடைக்கும் ஆலை இருந்தும் கற்களைப் பெறமுடியாத நிலை

*புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் குற்றச்சாட்டு*

முல்லைத்தீவு, மார்ச் 12

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 14 ஆம் கட்டைப்பகுதியில் கல்லுடைக்கும் ஆலை இருந்தும் உள்ளூர் மக்களின் கட்டுமாணத் தேவைகளுக்கான அத்திவாரக் கற்கள் வழங்கப்படுவதில்லை என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இ.சத்திய சீலன் குற்றம்சாட்டியுள் ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

2012ஆம் ஆண்டில் இருந்து கல்லுடைக்கும் ஆலைகள் ஒட்டுசுட்டானில் இயங்கி வருகின்றன. ஆனால் வீடுகளை அமைக்கின்ற எமது மக்கள் அத்திவாரக் கற்கள், சல்லிகள் என்பனவற்றை குறித்த ஆலையில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

இது தொடர்பாக கூட்டங்களில் நான் குரல் எழுப்பியபோது ஒரு நாள் அல்லது இரு நாள்களுக்கு சல்லிகள் மட்டும் வழங்கப்பட்டன. ஆனால் அத்திவாரக் கற்கள் வழங்கப்படவில்லை. அவை பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

உள்ளூர் மக்கள் அதிக விலை கொடுத்து வேறு பிரதேசங்களில் இருந்து கற்களைப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நீண்டகாலமாக நிலவி வருகின்ற இப் பிரச்சினை தொடர்பில் பல முறை கோரிக்கை விடுத்தும் உரிய தீர்வுகள் வழங்கப்படவில்லை -என்றார். (ஐ-13)

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் உண்மை வெளிப்படுத்தப்படும்

*அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு*



**கொழும்பு,மார்ச் 12**
**ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுடன், தொடர்புடைய குற்ற வாளி களைப் பாதுகாக்க வேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பாது காத்துக் கொள்ள, உண்மையை மூடி மறைக்க முடியாது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இத னைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுக்கும், அது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்கு ழுவின் அறிக்கைக்கும், தற்போ தைய அரசுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. ஜனாதிபதி ஆணைக்குழு, விசாரணை நடவடிக்கைகளை சுயா தீனமான முறையில் முன்னெடுத்தது. எவ்வித அரசியல் தலையீடுகளும் இடம் பெறவில்லை. குண்டுத்தாக் குதல் தொடர்பான அறிக்கையில் பல குறைப்பாடுகள் காணப்படுகின் றன என்பதை பகிரங்கமாகச் சுட்டிக் காட்டியுள்ளோம். இதனை அரசின் பலவீனம் எனக் கருத முடியாது. குறைபாடுகள் பரிசீலனை செய்யப் படுகின்றது- என்றார். (க-இ)



## மாணவர் கௌரவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 12
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் சன சமூக நிலை யத்தால் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் 10ஆம் திகதி நடை பெற்றது. இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் இந்து தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் ஐந்து பேரும், ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியால யத்தில் கல்வி பயிலும் ஒரு மாணவருமாக மொத்தம் ஆறு மாணவர்கள் கௌரவிக்கப் பட்டனர். (ச-13)

## கரைதுறைப்பற்றுக்கு புதிய உறுப்பினர் தெரிவு

முல்லைத்தீவு, மார்ச் 12
கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினரின் பதவி விலகலால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் மோகனராஜசிங்கம் விக்னா என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கரைதுறைப்பற்று பிர தேச சபை உறுப்பினர் ம.சுபாஸ்கர் பதவி விலகியதையடுத்து அவர் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் செய லாளர், 30 நாள் காலக்கெடுவுக்குள் உறுப்பி னர் பதவிக்கு ஒருவரைப் பரிந்துரை செய்யு மாறு கோரப்பட்டிருந்தார். இதன்படி கட்சியால் மோகனராஜசிங்கம் விக்னாவின் பெயர் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இது குறித்த வர்த் தகமானி அறிவிப்பு, கடந்த செவ்வாய்க்கி ழமை வெளியாகியுள்ளது. புதிய உறுப்பினர் எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபை அமர்வில் சபை உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார். (வ-19)

## தேரரின் காரை திருடியவர் கைது

கொழும்பு,மார்ச் 12
விபஸ்ஸனா பாவனா மத்திய நிலையத்தின், விகாராதிபதி உடுதும்பர காஷ்யப்ப தேரரின், சொகுசுக் காரைத் திரு டிய குற்றச்சாட்டில் சந் தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். தலவத்து கொட இலங்கை வங் கிக்கு அருகில் நிறுத்தப் பட்டிருந்த கார், கடந்த செவ்வாய்க்கிழமை திரு டப்பட்டிருந்தது. சுமார் அரை மணித்தியால இடைவெளிக்குள் கார் கண்டுபிடிக்கப்பட்டது. அதனைத் திருடிய குற் றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.
காரில் பொருத்தப்பட்டி ருந்த ஜி.பி.எஸ். தொழி நுட்பத்தைப் பயன் படுத்தி கல்கொட கிரா மோதய மாவத்தையில் கார் மீட்கப்பட்டது. குறித்த காரைப் பொலி ஸார்கைப்பற்றியபோது, அதில் இலக்கத் தகடு அகற்றப்பட்டிருந்தது. ஜி.பி.எஸ்.கருவியை அகற்றப்பட்டிருந்தது. பதிலாக வாகனத்தின் பிறிதொரு பகுதியும் அகற்றப்பட்டிருந்தது. காரின் பெறுமதி 70 லட் சம் ரூபா எனத் தெரிவிக் கப்படுகிறது. தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன் னெடுத்து வருகின்ற னர். (க-இ)



# மன்னாரில் உற்பத்தியாகும் உப்பு மன்னார் மக்களுக்கே

*மன்னார் மாவட்டச் செயலர் பணிப்பு*

மன்னார், மார்ச் 12
மன்னார் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப் படும் உப்பை மன்னார் மாவட்ட மக்கள் மற்றும் மீனவர்களின் பாவனைக்கு வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம் பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மன்னார் மாவட்டச் செயலர் ஏ.ஸ்ரான்லி டி மெல் பணித்துள்ளார்.
மக்களும், மீனவர்களும் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து மன்னாரில் அமைந் துள்ள தேசிய உப்பு உற்பத்தி நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை நேரடியாகச் சென்று பார்வையிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மன் னார் மாவட்ட மீனவர்கள் கருவாட்டு உற்பத் திக்காக மன்னாரில் அமைந்துள்ள தேசிய உப்பு உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய் யப்பட்ட உப்பைப் பயன்படுத்துகின்றனர். மன்னாரில் உள்ள தரமான உப்புக் காரண மாக இங்கு உற்பத்தி செய்யப்படும் கருவாட் டுக்கு மதிப்பு அதிகம். ஆனால் தற்போது இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பு மன் னார் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு விற் பனை செய்யப்படாமல் வேறு மாவட்டங்க ளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இந்த விடயம் தொடர்பில் மாவட்டச் செயல ரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து தேசிய உப்பு உற்பத்தி நிலை யத்துக்கு சென்ற அவர், மன்னாரில் உற் பத்தி செய்யப்படும் உப்பை மன்னார் மாவட்ட மக்களுக்கும், மீனவர்களுக்கும் பாவனைக்கு வழங்க துரித நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பணித்துள்ளார். (வ-56)

## பழமை வாய்ந்த விநாயகர் சிலை மக்கள் தரிசிப்புக்கு

மானிப்பாய், மார்ச் 12
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் தின் பழமை வாய்ந்த விநாயகர் சிலை ஒன்று ஐந்து வருடங்களுக்குப் பின்னர், மீண்டும் ஆலய வளாகத்தில் மக்கள் தரி சிப்பதற்கு வசதியாக பிரதிஷ்டை செய்யப் பட உள்ளது.
ஆரம்பத்தில் ஆலய மூலஸ்தானத்தில் இருந்த இந்த விநாயகர் சிலையே ஆலய வளாகத்தின் முன்புறமாக மக்கள் தரிசிப் புக்கு வைக்கப்படவுள்ளது. இதற்கான கட்டட அமைப்பு வேலைகளை உரிய தரப்பினர் மேற்கொண்டுள்ளனர். (ஜ-115)


### கற்கோவளத்தில்
# மக்களின் எதிர்ப்பையடுத்து கைவிடப்பட்டது நிலஅளவை

யாழ்ப்பாணம், மார்ச் 12
கற்கோவளம் பகுதியில் 3 குடும்பங்களுக்கு சொந்தமான 4 ஏக்கர் காணி, இலங்கை இராணுவத்தின் 16ஆவது காலாட்படையி னரால் கையகப்படுத்தப்பட்டு அபகரிக்கும் முயற்சி கடந்த 8ஆம் திகதி முன்னெடுக்க ப்பட்ட நிலையில், பொதுமக்களின் எதிர்ப்பின் மூலம் அந்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.
குறித்த நடவடிக்கைக்கு மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் உட்பட ஏராளமானோர் ஒன்றுகூடி எதிர்ப்பை வெளியிட்டத்தை அடுத்து, நிலத்தை இராணுவத்துக்குக் கையகப்படுத்தும் முயற்சி கைவிடப்பட்டது. இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் நாடாளு மன்ற உறுப்பினரான செல்வராசா கஜேந் திரன், முன்னாள் மாகாணசபை உறுப்பி னர் விந்தன் கனகரட்ணம், சிவில் சமூக செயற்பாட்டாளர் குணாளன், பிரதேச சபை உறுப்பினர்களான கலையமுதன், சஜீவன், மயூரன் மற்றும் பொதுமக்கள் உட்பட பல ரும் கலந்துகொண்டனர். (ச-319)

# ஓராண்டு நினைவஞ்சலி

## சின்னத்தம்பி சிவகுமார்

(கற்பக சிவசோதியில் உரிமையாளர்)



பிறப்பு 04.10.1956
இறப்பு 22.02.2020

மாதவத்தால் கிடைத்த அருந்தவப்
- புதல்வா....
பாரே போற்றிடும்
அருமை மைந்தா...
கனவினைச் சுமந்து
வாழ்ந்த காலங்களை
இடையிலே விட்டு
எங்கே சென்றீர்கள்....?
சிவனுக்கு இராத்தியில் ....
சிவனே சிவகுமாரனை அழைத்தது
- தான் ஏனோ..?
பாசத்தோடு வளர்ந்த அன்புச்
- சகோதரிகளையும்..
ஆசையோடு விளையாடி மகிழ்ந்த
- மருமக்களையும் விட்டு
- எங்கே சென்றீர்கள்...? !
மறக்க மனமது
இடமளிக்குது இல்லையே...!
நம் ஆயுள் வரை நம்மை
தவிப்பில் தவிக்க விட்டுச்
சென்று விட்டீர்களே...!
நியமா..? கனவா ?
என்னும் தவிப்போடு இன்று
வாழ்கின்றோமே..!

ஓர் ஆண்டென்ன..
ஆண்டுகள் பல கடந்தாலும் கூட
அணையா ஒளி விளக்காக நீங்கள் நம்
மனத்துள்ளே வாழ்வீர்கள் என்றுமே ..!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிராத்திக்கின்றோம்....

மருமகள்
சிவாஜினி சரவணன் (கண்ணா)
லண்டன்

உங்கள் பிரிவால் வாடும்:
சகோதரர்கள், மைத்துனர்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
சின்னத்தம்பி குடும்பத்தார்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 19 . 07 . 1947



சிவன் அடியில் 05 . 03 . 2019

அமரர்

## பொன்னையா கந்தசாமி

(யாழ். பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலை பதில் பதிவாளர், யாழ் மருத்துவ பீடத்தின் ஓய்வு நிலை சிரேஷ்ட பதிவாளர், கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில், கைதடி இனுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோயில், கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் கோயில் என்பவற்றின் சபை உறுப்பினர், கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தின் முன்னாள் செயலாளர்.
அதன் முன்பள்ளியின் ஆலோசகர்)

அன்பினிலே மிகுந்தவராய் பண்பினிலே சிறந்தவனாய்
மண்ணிலே உதித்து அமைவுற்ற வாழ்வினில்
நறுமணம் பரப்பி இல்லத்தில் விருட்சமாய் பாசநிழல்
தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய் உரிமையாய்
உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
இரண்டாண்டு பறந்தோடிச் சென்றிருந்தாலும்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றியே வாழ்ந்-
திடுவோம்.

"புஸ்ப பவனம்"
கைதடி கிழக்கு,
கைதடி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# விபத்தில் பெண் காயம்

வவுனியா, மார்ச் 12

வவுனியா கண்டி ஏ-9 வீதியில் தெற்கு வலயக்கல்வி அலுவலகத்துக்கு முன்பாக நேற்று மதியம் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீதியின் மறுபக்கம் திரும்ப முற்பட்ட மோட்டார் சைக்கிளை பின்புறமாக வந்த பட்டா ரக வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த 25 வயது மதிக்கத்தக்க பெண் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். முன்னால் திருப்பத்தடை எனக் குறிப்பிடப்பட்டிருந்த இடத்தில் வீதி விதிமுறைகளை மீறி மோட்டார் சைக்கிளைத் திருப்ப முற்பட்டமையே விபத்துக்கு காரணம் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

(வ-18)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## கண்ணிவெடியகற்றுனர்களுக்கான பதவி வெற்றிடம்

ஹலோ ட்றஸ்ற் நிறுவனமானது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 23 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்றஸ்ற் இன் எதிர்கால வேலைக்காக மிதிவெடிப்பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது யாதெனில் கண்ணிவெடியகற்றலானது துப்பரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும். எமது தரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்ள முடியும். எனவே இதனை கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.


குறிப்பு : விண்ணப்பங்கள் முல்லைத்தீவு மாவட்ட நகரப் பிரதேசங்களை (கொக்குத்தொடுவாய், அளம்பில், முல்லைத்தீவு நகரம், சிலாவத்தை, தண்ணீரூற்று, முள்ளியவளை, குமுழமுனை செம்மலை). அண்டிய பகுதிகளில் வசிக்கும் பெண்களிடமிருந்து மட்டுமே எதிர்பார்க்கப்படுகின்றன. ஏனெனில் எம்மிடம் ஏற்கனவே போதிய அளவு ஆண் பணியாளர்கள் உள்ளனர்.

**மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 19ம் திகதி மார்ச் மாதம் 2021 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்க முடியும்.**

**த ஹலோ ட்றஸ்ற்,
450, திருநகர் மேற்கு,
கிளிநொச்சி.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 09 . 1942



மறைவு 11 . 03 . 2021

## கிறிஸ்ரபெல் செல்லம் நல்லையா

காரைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்ரபெல் செல்லம் நல்லையா நேற்று (11.03.2021) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தோமா மேரி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தோமா நல்லையா (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், விக்ரர் ஜெயக்குமார் (பிரதி அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி), வின்சன் ராஜ்குமார், (தபால் ஊழியர், காரைநகர்), புளோரா விமலினி (UK), மேரி விஜயநந்தினி (ஆசிரியர், சென்.கிளேரியஸ் கல்லூரி, கொழும்பு -06), வில்லியம் சாந்தகுமார் (அதிபர், யா/தம்பாட்டி அ.த.க வித்தி, ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புத் தாயாரும், லதிஸ் கிறேஸ் (உதவிக் கல்விப்பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், மருதனார்மடம்), விஜயமாலினி, குசலகுமார் (UK), Rev. பத்மதயாளன் (தென்னிந்தியத் திருச்சபை, கிளிநொச்சி), கலாநிதி.துளசிதா (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியும், வசந் கொட்வ்றி, றேச்சல் பெலா, ரிர்ஷா, றேத்சின், துஸ்யந்தி, துவாரகா, பெரித் சௌமியா, அபிஷா ஆரபி, சாரா ராகவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (12.03.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு காரைநகரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று காரைநகரில் உள்ள தென்னிந்தியத் திருச்சபை கல்லறைத்தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 225 2190

தகவல்:
குடும்பத்தினர்.

# வெடுக்குநாறி சிவன் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாட்டுக்குத் தடை

**வவுனியா, மார்ச் 12**

**வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இந்த முறை சிவராத்திரி வழிபாடுகள் நடைபெறவில்லை. பொலிஸார் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினரின் கெடுபிடிகள் காரணமாகவே வழிபாடுகள் நடைபெறவில்லை.**

வவுனியா, நெடுங்கேணி, வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் தமிழ் மக்கள் காலம் காலமாக வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் ஆதிலிங்கேஸ்வரர் உள்ள பகுதி தொல்பொருள் திணைக்களத்துக்கு உரியது என்று தெரிவித்து, அங்கு வழிபாடுகளை மேற்கொள்வதற்குத் தொல்பொருள் திணைக்களத்தினர் தடைகள் ஏற்படுத்தியிருந்தனர்.

பொலிஸார் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் கெடுபிடிகள் காரணமாக நேற்று சிவராத்திரி தின வழிபாடுகள் அங்கு நடைபெறவில்லை. அதேவேளை ஆலய நிர்வாகத்தினர் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு இன்று வவுனியா நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (எ-110)

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆணும் பெண்ணும் கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு, மார்ச் 12

போலிக்கடவுச் சீட்டு மற்றும் போலி விசாவைப் பயன்படுத்தி வெளிநாடு செல்ல முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர். பருத்தித்துறையைச் சேர்ந்த இளம் பெண்ணும், சாவகச்சேரியைச் சேர்ந்த ஆண் ஒருவருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் டுபாய் வழியாக ஜேர்மனி மற்றும் கனடாவுக்குச் செல்ல முயன்றபோது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் எல்லை கண்காணிப்பு பிரிவினர் இவர்களை கைதுசெய்துள்ளனர்.

சாவகச்சேரியில் வசிக்கும் 35 வயதான நபர், கனடாவுக்கு புறப்படுவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தார். போலி ஜேர்மன் விசாவுடன் விமான நிலையத்துக்கு வந்த 29 வயது இளம்பெண், பருத்தித்துறையைச் சேர்ந்தவர்.

டுபாய்க்கு புறப்படவிருந்த விமானத்தில் ஏறுவதற்கு இருவரும் நேற்று அதிகாலை 12.20 மணிக்கு விமான நிலையத்துக்கு வந்திருந்தனர். அவர்களின் ஆவ்ணங்களில் சந்தேகம் ஏற்பட்டதையடுத்து, எல்லை கண்காணிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கனடாவுக்குச் செல்ல முயற்சிக்கும் நபரின் கடவுச்சீட்டு மற்றொரு நபருடையது என்று எல்லை கண்காணிப்புப் பிரிவு கூறுகிறது. தொழில்நுட்ப ஆய்வுகளிலிருந்தும், வாய்வழி கேள்விகள் மூலமும் இது உறுதிப்படுத்தப்பட்டது.

ஜேர்மனி புறப்பட்ட பெண்ணின் கடவுச் சீட்டு போலித் தகவல்களுடன் தயாரிக்கப்பட்டது. மொரட்டுவ பகுதியிலுள்ள அறியப்படாத தரகர் ஒருவர் மூலமாக 10 லட்சம் ரூபா செலவில் அது தயாரிக்கப்பட்டது என்று பெண் விசாரணையில் தெரிவித்துள்ளார். அந்தப் பெண்ணின் கணவர் ஜேர்மனியில் வசித்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)


## நன்றி நவிலல்



திருமதி
வைத்திலிங்கம்
கனகம்மா

கடந்த 07.03.2021 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த நயினாதீவினைப் பிறப்பிடமாகக் கொண்ட எனது தாயார் திருமதி வைத்திலிங்கம் கனகம்மா அவர்களின் மறைந்த செய்தியினை அறிந்து ஓடோடி வந்து உடன் இருந்து ஆறுதல் கூறி உதவிகள் பல புரிந்த உறவுகளிற்கும், தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்து கொண்டோருக்கும், முகப்புத்தகம் மூலம் இச்செய்தியை வெளியிட்டு பகிர்ந்து கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

880/4,
கே.கே.எஸ் வீதி,
யழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
வீ.வை.யோகலிங்கம்
077 194 8052



## வீட்டுக் கிருத்தியமும் நூல் வெளியீடும்

கடந்த 07.02.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் சுந்தரலிங்கம் நிருத்திகன்**
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)



அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியை 09.03.2021 செவ்வாய்க்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம் பெற்றது. 14.03.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், நூல் வெளியீடும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

அன்புடன்
குடும்பத்தினர்

கீர்த்தனம், அல்வாய் - 077 238 0249

சு. நிருத்திகனின்
"உனக்கு மரணமில்லை"
கவிதைத் தொகுதி வெளியீடு

தலைமை
திரு. க.தர்மதேவன்

நினைவுரைகள் வெளியீட்டுரை
கவிஞர் சித்திரா சின்னராஜன்

கருத்துரைகள்
கவிஞர் மா. செல்வதாஸ்
திரு. இராசையா உமாகரன் - ஊடகவியலாளர்


# பொதுபல சேனாவுக்குத் தடையா? பிக்குகள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 12

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கைக்கும், பொதுபலசேனா அமைப்பு உட்பட பௌத்த அமைப்புக்களை தடைசெய்ய முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பொதுபல சேனா அமைப்பினரும் பௌத்த பிக்குகள் சங்கத்தினரும் இணைந்து கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கும் கொள்கைத் திட்டங்களை மார்ச் 11 என பெயர் குறிப்பிட்டு அரசிடம் கையளித்தனர். விடுதலைப் புலிகள் அமைப்பு செயற்பட்ட காலகட்டத்தில் இராணுவத்தின் உளவாளிகளாக செயற்பட்ட பயங்கரவாதி சஹ்ரான் உள்ளிட்ட முஸ்லிம் இளைஞர்களுக்கு யார் ஆயுதம் மற்றும் நிதியுதவி என்பவை வழங்கினர்?, வழங்கப்பட்ட ஆயுதங்கள் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டனவா? இல்லையாயின் அந்த ஆயுதங்களுக்கு என்னவாயிற்று?

குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு அரசியல் நோக்கங்களை விடுத்து தண்டனை வழங்கப்பட வேண்டும்.

குண்டுதாரியின் மனைவியான சாரா உயிருடன் உள்ளாரா என்பது தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கான விசாரணை விசேட மேல் நீதிமன்றம் ஊடாக நாளாந்தம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இன, மத கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு அரசியல் கட்சிகள் செயற்படுகின்றமையால் தேசிய நல்லிணக்கம் பாதிக்கப்படுகிறது. ஆகவே இவ்வாறான அரசியல் கட்சிகளை முழுமையாக தடைசெய்ய வேண்டும்.- என்று கோரிக்கைகள் முன்வைத்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த-இ)

# குற்றவியல் நீதிமன்றை வலியுறுத்தி 12ஆவது நாளாக போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 12

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று வியாழக்கிழமை 12ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

இலங்கையில் இடம்பெற்றன என்று கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக இடம்பெற வேண்டும் எனவும் தமிழர்களுக்கான சுய நிர்ணய உரிமை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் இந்த உணவுத் தவிர்ப்பு போராட்டம் கடந்த 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. நல்லூர் - நல்லை ஆதீனம் முன்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் இந்த சுழற்சி முறையிலான தொடர் உணவுத் தவிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த உணவுத் தவிர்ப்பு போராட்டத்துக்கு காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், தமிழ் அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பலரும் ஆதரவு வழங்கி வருகின்றனர். (எ)

# உறக்கத்திலிருந்த இளைஞன் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 12

பருத்தித்துறை, சுப்பர்மடத்தில் இளைஞர் ஒருவர் இரும்புக் கம்பிகளால் தாக்கப்பட்டுள்ளார். அதில் படுகாயமடைந்த அவர் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீதியோரம் உள்ள கொட்டகை ஒன்றில் உறக்கத்தில் இருந்தபோது, குறித்த இளைஞன் மீது மூவர் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகின்றது. தாக்குதலில் படுகாயமடைந்தவர் 22 வயதுடையவர் என்றும், தாக்குதல் நடத்தியவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)


## மரண அறிவித்தல்



**பொன்னம்பலம் கனகநாயகம்**
(ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்)

மண்ணில் 28.03.1936 | இறைவன் அடியில் 10.03.2021

மீசாலை கிழக்கு மீசாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கனகநாயகம் (10.03.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம்-காமாட்சி தம்பதிகளின் ஒரே புதல்வனும், குணபாலதேவியின் அன்புக் கணவரும், திருமுருகன் (லண்டன்), திருமாறன் (சுவிஸ்), திருக்குமரன் (லண்டன்), திருராசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெஸ்ரினா, அன்னா, லீசா, ஆர்த்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஸ்வின், பற்றிக், அனுசியா, விஜே, அருள், அஜே, பிரியா, கீரன், யஸ்மின், கோபன், மெய்ஸி, பொபி, ஆதியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2021) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் மீசாலை மத்திய வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
கயிலாயம்பிள்ளை குடும்பம்.
077 119 4541

## அறிக்கையாளரின்...

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணை பிரிட்டனால் முன்வைக்கப் படவுள்ளது. இந்தத் தீர்மான வரைவு தொடர்பில் ஆராயும் கூட்டம் ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது இலங்கை தொடர்பான தீர்மான வரைவு தொடர்பில் பிரிட்டன் பிரதிநிதி விளக்கமளித்துள்ளார். 'ஐ.நா. அறிக்கையாளர்கள் இலங்கை தொடர்பில் முன்வைத்துள்ள பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும். இந்த விடயம் தீர்மான வரைவில் உள்புகுத்தப்படுகின்றது. கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை கட்டாயத் தகனம் செய்யும் விடயம் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களை நீக்க வேண்டும் என்று இலங்கை கோரியிருந்தது. அதனை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. இலங்கையின் கோரிக்கையை நிராகரிக்கின்றோம். கடந்த 10 மாதங்களுக்கு மேலாக கரிசனையில் இருந்த விடயம் என்பதால் அதைப் பிரேரணையில் தொடர்ந்து உள்ளடக்கின்றோம்' என்று பிரிட்டனின் பிரதிநிதி இதன்போது கருத்துரைத்துள்ளார். இந்தப் பக்க அமர்வில், சீனா, ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஒ.5)

## தவறான...

வெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

சங்கரன் நடராசா (வயது66) என்பவரே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது. வீட்டில் யாரும் இல்லாத நேரம் அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-10)

## வீட்டிலிருந்து...

கிய நிலை யில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. செட்டிக்குளம், கங்கங்குளத்தைச் சேர்ந்த செல்வகுமார் (வயது52) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

நேற்று மதியம் வீட்டிலிருந்து சென்ற இவர் மாலையாகியும் வீடு திரும்பவில்லை. அதையடுத்து உறவினர்கள் அவரைத் தேடியுள்ளனர். செட்டிக்குளம் மயானத்துக்கு அருகில் உள்ள காட்டுப் பகுதியில் மரம் ஒன்றில் தூக்கிட்ட நிலையில் இவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக செட்டிக்குளம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். தற்கொலையா? அல்லது கொலையா? என்பது தொடர்பில் விசாரணைகளின் பின்னரே தெரிவிக்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-18)

## குளத்தின்...

கிய நிலையில் அவரை, அவருடைய மகன் மீட்டு பூநகரி மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோது அவர் அதற்கு முன்னரே உயிரிழந்து விட்டார் என்று பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. இதே இடத்தைச் சேர்ந்த விசுவரத்தினம் (வயது - 65) என்பவரே உயிரிழந்தார். அவருக்கு வலிப்பு நோய் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. பூநகரி பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-10)

## இந்தியத்...

ணங்களுக்கு திடீர் பயணத்தை மேற்கொண்டுள்ளார். தனது பயணத்தின் போது தமிழ்த் தலைவர்களை அவர் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு வழங்க வேண்டும் என்ற அழுத்தம் தமிழ்த் தலைவர்களால் இந்தியத் தூதுவருக்கு வழங்கப்படும் என்று தெரியவருகின்றது.

மன்னார், திருக்கேதீச்சரத்தில் நேற்று நடைபெற்ற சிவராத்திரி விழாவில் இந்தியத் தூதுவர் பங்கேற்றார். அதன்பின்னர் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்புக்களிலும் அவர் ஈடுபட்டார். இரண்டு தினங்கள் வரையில் வடக்கில் தங்கியிருக்கும் அவர், தமிழ் அரசியல் தலைவர்கள் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். அதன்பின்னர் கிழக்கு மாகாணத்துக்கும் அவர் செல்லவுள்ளார். யாழ்ப்பாணத்தின் முத்தீவுகளையும் சீனாவுக்கு வழங்கும் நிலைப்பாட்டில் இலங்கை அரசு உறுதியாக இருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில், இந்தியத் தூதுவரின் வடக்குப் பயணம் முக்கியத்துவம் பெறுகின்றது. (ஒ,5,213,20)

## தொடர்...

தார். சில நாள்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டி ருந்தார். தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டு சிகிச்சைகளின் பின்னர் அவர் வீடு திரும்பியிருந்தார். நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இவரது மனைவி அவதானித்தபோது அவர் படுக்கையில் அசைவற்றுக் காணப்பட்டுள்ளார். அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். சடலத்தில் மாதிரி பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## வவுனியாவில்...

யப்பட்டுள்ளது.

வவுனியா, கண்டி வீதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றும் பணியாளர்களுக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் சிலருக்கு கடந்த சில நாள்களில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில், அங்கு பணியாற்றுவோருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஒரு தொகுதி முடிவுகள் நேற்றிரவு வெளியான நிலையில், அவர்களில் 7 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தத் தொழிற்சாலையில் இதுவரை 14 பேர் வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

அதேவேளை, வவுனியா புதிய பஸ் நிலையத்தில் உள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றும் ஒருவருக்கும் நேற்று வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களை இனங்கண்டு, தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-18)

## பயிற்சிப்...

319 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் இருவருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தொண்டு நிறுவனம் ஒன்று நடத்திய பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற 29 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டிருந்த நிலையில், அவர்களில் இருவருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களில் ஒருவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர். மற்றையவர் பதுளையைச் சேர்ந்தவர். இவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் சுகாதார அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 371 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் எவருக்கும் தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## வீடு புகுந்து...

பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

வட்டக்கச்சி, கட்சன் வீதியைச் சேர்ந்த அருளம்பலம் துசியந்தன் (வயது39) என்னும் இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் வட்டக்கச்சி, கட்சன் வீதியில் நடந்துள்ளது. அந்தப் பகுதியில் வசிக்கும் பதின்ம வயது மாணவி ஒருவர் பரீட்சைக்குச் சென்று வரும்போது இளைஞர் ஒருவர் , பின் தொடர்ந்து சென்று தொல்லை கொடுத்தார் என்றும், நேற்றுமுன்தினம் அந்த மாணவி, தனது இளைய சகோதரனான சிறுவன் ஒருவனுடன் சென்ற போது, அந்த இளைஞர் சிறுவனைத் தாக்கினார் என்றும் கூறப்படுகின்றது. அதைக் கண்ட துசியந்தன் அந்த இளைஞனை எச்சரித்துள்ளார்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் இரவு துசியந்தனின் வீட்டுக்குள் புகுந்த அந்த இளைஞர், சரமாரியாக துசியந்தனை கத்தியால் குத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். அதில் படுகாயமடைந்த துசியந்தன் உடனடியாக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார்.

தாக்குதல் நடத்தினார் என்று கூறப்படும் 18 வயது இளைஞன் நேற்று இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-12,6,10)

## இ.போ.ச...

போக்குவரத்துச் சபை பஸ்ஸில் பயணிக்கும் எவருக்கும் கொரோனாத் தொற்று அறிகுறிகள் காணப்பட்டால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை தொடர்புகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22ஆம் திகதி இந்த வழித்தட பஸ்ஸில் பயணித்த ஒருவருக்கு நேற்றைய தினம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்தே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழித்தடப் பேருந்தில் பயணித்தவர்கள் தாமாக முன்வந்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்றும், எவருக்கேனும் கொரோனாத் தொற்று அறிகுறிகள் காணப்பட்டால் தங்கள் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர்களைத் தொடர்புகொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-159)

## யாழ்.நகரில்...

யாழ்ப்பாணம் மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடியைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடம் இருந்து சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான 25 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். உபபொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான யாழப்பாணம் மாவட்ட போதைப்பொருள் ஒழிப்பு பொலிஸ் பிரிவே இந்தக் கைதுநடவடிக்கையை முன்னெடுத்திருந்தது.

கைதுசெய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## யாழ்.பிரதேச...

பட்டு வருகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

பிரதேச செயலர்கள் சிலரை இடமாற்ற முன்னர் எடுத்த முயற்சிகள், அந்த விடயம் அமைச்சு மட்டத்துக்குத் தெரியவந்தமை, அது பிசுபிசுத்ததை அடுத்து தற்போது ஒட்டுமொத்த பிரதேச செயலர்களையும் இடமாற்றம் செய்ய அந்த அரசியல்வாதி முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அழுத்தம் கொடுக்கும் அந்த அரசியல்வாதி, அமைச்சின் அதிகாரிகள் ஊடாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என்று தெரியவருகின்றது. யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட, தற்போது வெளிமாவட்டங்களில் பணியாற்றும் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளைத் தொடர்புகொள்ளும் அமைச்சு அதிகாரி ஒருவர், உங்களுக்கு யாழ்ப்பாணம் சென்று பணியாற்ற விருப்பமா? என்று அவர்களின் விருப்பத்தை அறியும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

அவர்களுக்கு யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்கி, இங்குள்ளவர்களை வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்று அதிகாரிகள் மட்டத்தில் பேசப்படுகின்றது.

இது தொடர்பாக பொதுநிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவரைத் தொடர்புகொண்டு "உதயன்" கேட்டபோது, வடக்கு மாகாணத்தில் நிர்வாக விடயங்களில் அரசியல் அழுத்தம் உள்ளது என்று பல முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்திருக்கின்றன. எனினும் அவை தொடர்பான ஆதாரங்கள் எமக்குக் கிடைக்காததால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆதாரங்கள் கிடைக்குமாக இருந்தால் நிச்சயம் நடவடிக்கை எடுப்போம்" என்று தெரிவித்தார். (எ-ஒ5,22)

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 - 03 - 1954



மறைவு 10 - 03 - 2021

## புஸ்பநாதன் செல்வமனோகரி

உரும்பிராய் ஞானவைரவர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பநாதன் செல்வமனோகரி (10.03.2021) புதன்கிழமை சிவபத மடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை அன்னலட்சுமி தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் பூரணம் தம்பதி களின் அன்பு மருமகளும் புஸ்பநாதனின் அன்பு மனைவியும், ஸ்ரீதர்சினி, திவாகரன் (நியூசிலாந்து), தினேஸ், (ST.John's College Jaffna ஆசிரியர்) ஆகி-யோரின் அன்புத் தாயாரும், செல்வேந்திரகுமார், நிலோதா (நியூசிலாந்து), துசியந்தினி (தாதிய உத்தியோகத்தர்- யாழ் போதனா வைத்தியசாலை) ஆகி-யோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், தனபாலசுந்தரம் மற்றும் சிவபாதசுந்தரம், அருள்ஞானசுந்தரம் (கனடா), ரதிமனோகரி (கொழும்பு), குணாமனோகரி (கனடா), வரதராஜாசுந்தரம் (கனடா) ஆகியோரின் சகோதரியும், பாக்கியலீலா, காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, தர்மகுணபவானி, ரஞ்சிதபவானி மற்றும் ஜெயராஜன், யோகராஜன், வாசுகி ஆகியோரின் மைத்துனியும், அபித்தா, சயந்தவி (நியூசி லாந்து) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.03.2021) வியாழக்கிழமை நடை-பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்

தகவல்
குடும்பத்தினர்
077 949 6279

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
தொழினுட்பப் பிரிவு
புதிய பிரிவு A/L 2023
Day Class A/L 2021
ஆரம்பம் 2021.03.14 காலை 9.30 மணிக்கு
077 248 7774 , 021 221 7860, 076 552 9093

NEC
பெருமாள் கோயிலடி யாழ்ப்பாணம்
T.P.: 076 535 0999
Physics
(Tamil & Engilsh - M/d)
A. கபில்
A/L 2023
ஆரம்பம்: 13.03.2021 சனி
காலை: 9.00 மணி
A/L 2021, 2022, Day
நேரடி வகுப்புகள் வழமையான
நேர அட்டவணையின்படி நடைபெறுகின்றது

## ஆலோசனைக் குழு உறுப்பினர் நியமிப்பு

சாவகச்சேரி, மார்ச் 12



பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி ஆலோசனைக் குழு வின் உறுப்பினராக பனை அபிவிருத்திச் சபையின் தலைவரால் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் தென்மராட்சி கொத்தணியின் தலைவர் க.துரைசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

(வ-9)

குருக்கள் தேவை
யாழ் மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள அரசடி விநாயகர் ஆலயத்துக்கு குருக்கள் உடனடியாகத் தேவை. ஆசார சீலர்களான அந்தணப்பெருமக்கள் வரவேற்கப்படுகிறார்கள்
ஆலய பரிபாலனசபையினர்
தொடர்பு: 077 248 7939

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
A/L 2023
தொழினுட்பப்பிரிவு ஆரம்பம்
14.03.2021 ஞாயிறு காலை 09 மணி
பொறியியல் தொழினுட்பம்
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
உயிர்முறைமைகள் தொழினுட்பம்
077 017 5346

# மரண அறிவித்தல்

## திரு. நாகநாதர் சிவஞானம் (ராசா)

### (ஓய்வுபெற்ற CTB காப்பாளர்)



அன்னை மடியில் 07.06.1943

இறைவனடியில் 10.03.2021

ஏழாலை மேற்கு, புளியங்கிணத்தடி சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் 76/60, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் (மிலேனியம் விருந்தினர் விடுதி) கொண்டிருந்த திரு.நாகநாதர் சிவஞானம் (ராசா) அவர்கள் நேற்றுமுன்தினம் (10.03.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர் பாறுப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற நல்லதம்பி ஞானாம்பிகையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பவளக்கொடியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சீவரத்தினம், கனகமணி, காலஞ்சென்ற சிவலிங்கம், சிவானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஞானம்மா, சரஸ்வதி, கந்தசாமி, மற்றும் சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, தங்கேஸ்வரி, மகாராசா, நாகேஸ்வரி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தரூபன், சாந்தினி (மிலேனியம் விருந்தினர் விடுதி), ஜெயரூபன் (London), ஜெயந்தினி (Canada), சிவரூபன் (London), கஜரூபன் (London-Thurkas Exports) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகௌரி, சுகுமாரன் (மிலேனியம் விருந்தினர் விடுதி), எழிலரசி (London), அருட்செல்வன் (Canada), மிதுனாலினி (London), மடோனா (London) ஆகியோரின் அன்பு மாமனாரும், விஸ்னுஜா, துஸ்ஜா, சானுகா, வனோஜ், நிவேஸ், மானஸ்வி, கரிகாலன், பவன்னா, அஷ்சயா, அகல்யா, சாயுரி, நிவேதி, சேயுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2021) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இராமநாதன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் ஏழாலையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் ஏழாலை மேற்கு உசத்தியோடை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

சாந்தரூபன் குடும்பம் — அருட்செல்வன் ஜெயந்தினி குடும்பம்
சுகுமாரன் சாந்தினி குடும்பம் — சிவரூபன் குடும்பம்
ஜெயரூபன் குடும்பம் — கஜரூபன் குடும்பம்

மிலேனியம் விருந்தினர் விடுதி
077 6016 310, 077 243 1310, 021 222 5876

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.